விலை ரூபா 15.00

REGISTERED AS A CATHOLIC WEEKLY (G.P.O.197) FOUNDED 19 FEB 1876

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

# PAATHUKAVALAN

15-03-2009

மலர்: 133 இதழ்: 05 பக்கங்கள்: 08 St. Joseph's Catholic Press, 360 Main Street, P.O. Box. 2, Jaffna, Sri Lanka. Tel 021-222 2378, Fax 021 2229041, ISSN 1391 - 7633

### மார்ச் 19 – எமது பாதுகாவலர் புனித சூசையப்பர் திருநாள்



எங்கள் ஆபத்துக்களில் அதிக பலமும் தஞ்சமுமானவரே! பிசாசுகளுடன் போர் புரியும் இந்த வேளையில் மோட்சத்தில் நின்று கண்ணோககும். பாலக இயேசுவை பெருந் தீங்கில் நின்று காத்தது போல எம்மையும் காத்தருளும்.

## அந்தரித்துப் பரிதவிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல ஏற்பாடு செய்யுங்கள்!

### இரு தரப்பினருக்கும் யாழ் ஆயர் மீண்டும் அவசர வேண்டுகோள்

வன்னியில் வெறும் 7 மைல் நீளமான பாதுகாப்பு வலயத்துக்குள் சிக்குண்டு அந்தரிக்கும் மக்கள் பாதுகாப்பான இடத்துக்கு செல்வதற்கு, கிளிநொச்சி அல்லது முல்லைத்தீவு மாவட்டத்தில் இதற்கான இடங்களை இரு தரப்புக்களும் இணைந்து ஏற்பாடு செய்ய வேண்டுமென யாழ் ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் ஜனாதிபதிக்கும் விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளருக்கும் அவசர கடிதம் மூலம் மீண்டும் விண்ணப்பித்திருக்கின்றார்.

அங்குள்ள நிலைமைகள் வெகுவாக மோசமடைந்து, இறுதிக்கட்ட பயங்கரமான போர் வெடிக்கவுள்ள அறிகுறிகள் தோன்றியுள்ள நிலையில் ஆயர் அவர்களின் இந்த வேண்டுகோள், பூண்டோடு அழியப்போகிறோமோ என்று ஏங்கிக்கொண்டிருக்கும் மக்களின் அவலக்குரலாக ஒலித்து நிற்கிறது.

# போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவைகளை வழங்குவதே எமது அடுத்த பணிக்களமாக அமையும்

### கியூடெக் - கரித்தாஸின் வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் காலி மறைமாவட்ட ஆயர்

**கடந்த சில வாரங்களாக வன்னியிலிருந்து வெளியேறிவரும் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது தொடர்பாக உரிய கவனம் செலுத்தி வருகின்றோம். எமக்கு நிதி வழங்குகின்ற நிறுவனங்களுக்கும் இதை தெரியப்படுத்துகின்றோம். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவைகளை வழங்குவதே எமது அடுத்த பணிக்களமாக அமையுமென்று அகில இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் நீதி சமாதான ஆணைக்குழுத்தலைவர் மேதகு. ஆயர் ஹரல்ட் அன்ரனி பெரேரா தெரிவித்தார்.**




வடமராட்சியில் திக்கம், இன்பர்சிட்டி மற்றும் சுப்பர்மடம் ஆகிய இடங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கரித்தாஸ்–கியூடெக் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட வீடுகளை கையளிக்கும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் கரித்தாஸ்–கியூடெக் நிறுவன இயக்குனர் அருட்பணி கி.யோ.ஜெயக்குமார் அடிகளார தலைமையில், யாழ் ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் ஆசிரோடு கடந்த 4ம் திகதி சக்கோட்டையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அன்ரனி பெரேரா ஆண்டகை தொடர்ந்து உரையாற்றுகையில் காலி மறைமாவட்டத்தின் ஆயராக இருக்கின்ற நான் எனது அன்பையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்தவே யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளேன்.

கரித்தாஸ் நிறுவனத்தினூாக யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய மாவட்டங்களிலும் பல வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப் படுகின்றன. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள கட்டுமானத்திற்கென ஏனைய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் இவ் வருடம் மார்ச் மாதம் 30ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளன.

ஆனால், அந்த வேலைத்திட்டங்களைப் பொறுத்தமட்டில் அவை இதுவரை நிறைவடையவில்லை. தொடர்ந்தும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பல்வேறு காரணங்களாலேயே இவை பின்னடைவை எதிர்நோக்கின. இவ் விடயங்கள் தொடர்பாக எமக்கு நிதி வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்குக் கூறியிருந்தோம் அவர்கள் தொடர்ந்தும் நிதி வழங்க சம்மதம் தெரிவித்துள்ளதால் யாழ் மாவட்டத்தில் இந்த வேலைத் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

தெற்கிலுள்ள அரச அதிகாரிகளைச் சந்திக்கும்போது யாழ்ப்பாணத்தில் நான் அவதானித்த பிரச்சினைகள் தொடர்பாக விளக்கிக் கூறுவேன். இவ்வாறான சந்திப்புக்கள், கலந்துரையாடல்கள் மூலம் இங்கு காணப்படுகின்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாவிட்டாலும் சில பிரச்சினைகளுக்காவது தீர்வு காண முடியும் என்று நினைக்கின்றேன் என்று தெரிவித்தார்.

இந் நிகழ்விற்கு, கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை கரித்தாஸ் நிறுவனத்தின் தேசிய இயக்குநர் டேமியன்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## வன்னிப் பேரவலம் தொடர்கிறது!

வன்னியில் குறுகிய நிலப்பரப்புக்குள் சிக்கித்தவிக்கும் மக்களின் மரணங்களும், அவயவ இழப்புக்களும், பசி பட்டினிகளும் இன்றும் தொடர்ந்த வண்ணமே இருப்பதாக அங்கு பணியாற்றும் குருக்கள், துறவிகள் தெரிவிக்கின்றார்கள்.

அம்மக்களின் விடிவுக்காக தொடர்ந்து முயற்சிகளில் ஈடுபடும் படியாகவும் இன்னும் குறிப்பாக இறைவனிடம் வேண்டும்படியாகவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். இத்தவக் காலத்தில் துன்புறும் எம் உறவுகளுக்காக எமக்காக துன்புற்று மரித்த இயேசு ஆண்டவரிடம் உருக்கமாக தொடர்ந்து செபிப்போம்.

### வன்னி உறவுகளுக்காக செபம்

இரக்கம் உள்ள இறைவா! தாங்கொணா வேதனைகளோடும் இழப்புக்களோடும் உமது உதவியை எதிர்பார்த்து கண்ணீரோடு காத்திருக்கும் எமது வன்னி வாழ் உறவுகளை இரக்கக் கண்கொண்டு பாரும் உமது பாடுகள், மரணம், உயிர்ப்பு வழியாக நீர் உலகுக்கு அளித்த மீட்பையும், விடுதலை வாழ்வையும் அவர்கள் விரைவிலே பெற்றுக்கொள்ள உமது திருக்கரத்தினால் வன்னி மண்ணையும், எமது நாட்டையும் ஆசீர்வதியும். ஆமென்.

### தபக்காலம்

**எமது முக மூடிகளை அகற்றும் காலம்**
**எமது வாழ்வின் உண்மை நிலையை**
**கண்டுகொள்ளும் காலம்**

- திருத்தந்தை 16ம் பெனடிக்ற் -

## மல்வம் – புதிய பங்குத்தளம்

மானிப்பாய் பங்கு பிரிக்கப்பட்டு மல்வம் திருக்குடும்ப ஆலயம், உடுவில் செபமாலை அன்னை ஆலயம, அந்திரான் ஆரோக்கிய அன்னை ஆலயம், சங்குவேலி குழந்தை இயேசு ஆலயம் ஆகியவற்றை உள்ளடக்கியதான புதிய பங்குத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. இப்புதிய பங்கின் முதலாவது பங்குத்தந்தையாக அருட்பணி சி. யஸ்ரின் அடிகள் ஆயரினால் நியமிக்கப்படுள்ளார்.

### ஏனைய புதிய நியமனங்கள்

கரம்பன் பங்கின் பங்குத்தந்தையாக அருட்பணி. ஏ. சி. கிறிஸ்ரோபர் அடிகளும், மாதகல் பங்கின் பங்குத்தந்தையாக அருட்பணி. எஸ். எம்.பி. ஆனந்தகுமார் அடிகளும்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## 2011ல் முத். யோசவ் வாஸ் அடிகளின் விண்ணகப் பிறப்பின் 300 ஆண்டுகள் நிறைவு

### - மூன்றாண்டு ஆயத்தத் திட்டம் அறிவிப்பு -

2011 ம் ஆண்டு ஜனவரி மாதம் 16ம் திகதி இலங்கையின் திருத்தூதர் முத்திப்பேறு பெற்ற யோசவ் வாஸ் அடிகளின் 300 வது விண்ணக பிறப்பு தினத்தை திருச்சபை நினைவுகூருகிறது. எமது நாட்டின் விசுவாசத்தைப் பேணிப்பாதுகாத்த முத். யோசவ் வாஸ் அடிகளின் இந் நிகழ்வை இலங்கை வாழ் மக்களாகிய நாம் சிறப்பாக நினைவுகூர கடமைப்பட்டுள்ளவர்களாக இருக்கின்றோம்.

எனவே இலங்கை ஆயர் பேரவையின் பணிப்பின் பேரில் இலங்கை யோசவ் வாஸ் செயலகம் இது பற்றிய திட்டத்தை அறிவித்துள்ளது. இதன்படி இவ்வாண்டு தொடக்கம் மறைமாவட்ட, பங்குமட்டங்களில் செயல்படுத்தும்படியாக பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

★ முத். யோசவ் வாஸ் அடிகளை எமக்கு கொடையாகத் தந்த இறைவனுக்கு நன்றி கூறுதல்.

★ அவர் வளர்த்துவிட்ட விசுவாசத்தை புத்துணர்ச்சியோடு வாழ திட்டங்கள் தீட்டி முற்படுதல்.

★ அவருடைய வாழ்வு, பணி பற்றி மென்மேலும் அறிந்து அவரின் முன்மாதிரிகையை பின்பற்றி வாழ ஆவன செய்தல்.

★ அவர் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படவேண்டுமென செபித்தல்.

முத். யோசவ் வாஸ் அடிகளின் இவ் விசேட நிகழ்வை அர்த்தத்தோடு நினைவுகூர யாழ் மறைமாவட்ட மக்களாகிய நாமும் எம்மை ஆயத்தம் செய்வோம்.

## குருக்கள் மரியன்னையைப் பின்பற்றி, செவிமடுக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்

### - திருத்தந்தை 16ம் பெனடிக்ற் -

திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அடிகள் உரோமையில் குருக்களுக்கு அறிவுரை வழங்கும்போது செயலூக்கமுள்ள செவிமடுத்தல் (Active listening) குருக்களின் பணிக்கு இன்றியமையாதது என்று தெரிவித்தார். இச்செவிமடுத்தலுக்கு அவர் மரியன்னையை உதாரணம் காட்டினார். வானதூதரின் செயதிக்கு செவிமடுத்த நேரத்திலிருந்து மரியன்னையின் வாழ்வு இறைவனின் திட்டத்துக்கு செவிமடுத்துக் கொண்டிருந்த வாழ்வாகவே இருந்தது என்பதை அவர் நினைவுகூர்ந்து, குருக்களும் இறைவனின் குரலுக்கும், இறைமக்களின் குரல்களுக்கும் பொறுமையோடு செவிமடுக்க கற்றுக்கொள்வதன் வழியாக தம் பணிவாழ்வை சிறப்புறச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## பண்டத்தரிப்பில் தவக்காலத் தியானம்

பண்டத்தரிப்பு பத்திமா அன்னை திருத்தலத்தில் இறைமக்களுக்கான தவக்காலத் தியானம் வருகின்ற 21ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளதென திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை. இயேசுரட்ணம் அடிகள் அறிவிக்கின்றார். அன்றைய தினத்தில் அங்கு காலை 9 மணிமுதல் 11 மணிவரை நற்கருணை ஆராதனையும், 11 மணி முதல் 12 மணிவரை பாவசங்கீர்த்தனம் கேட்டலும், 12 மணிக்கு திருப்பலியும், 3 மணிக்கு சிலுவைப் பாதையும் இடம்பெறவுள்ளன. இத்தியான நாளின் சிந்தனைகளை அருட்தந்தை ஜெயசீலன் அடிகள் வழங்குவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் எமது எண்ணம்

ஆண்டவர் நமைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பது வீணாகும்

# நோன்பும் அதன் பலன்கள் பதினாறும்

**(இவ்விதழின் எமது எண்ணத்தில் இவ்வாண்டின் தவக்கால மையப்பொருளாகிய உண்ணாநோன்பு பற்றி அருட்பணி. மா. றேஜிஸ் இராசநாயகம் அடிகள் எழுதிய ஆக்கத்தை பிரசுரிக்கிறோம். - ஆசிரியர் )**

நூறு முறைகள் வரை விவிலியத்தில் நோன்பு பற்றி குறிப்பிட்டுள்ளபோதிலும், ஏராளமான கிறிஸ்தவர்களின் வாழ்வில் காணப்படாத நடைமுறையாகவே அது இன்னும் உள்ளது. ஆயினும் ஆன்மீக சக்தியுடன் தார்மீக அதிகாரத்தால் நிரம்பிய வாழ்வுள்ள மக்களுடன் நோன்பு தொடர்பு பட்டுள்ளது. செபத்திலும் நோன்பிலும் அதி ஈடுபாடு கொண்டவரான இறைமகன் இயேசுவைத் தவிர, பிரபலமான மதத்தலைவர்களான மோசே, எலியா, அன்னை திரேசா போன்றவர்களும் நோன்பிருந்தனர். அதுவும் அதிகமாக நீண்ட காலங்கள் இருந்துள்ளனர்.

அதிகமான கிறிஸ்தவர்கள் நீண்ட நோன்பின் தேவையை உணராது விட்டாலும், சிறிது நேரத்திற்கென்றாலும் ஒறுத்தல் செய்தால் பலன்கள் கிடைக்கும். நோன்பில் ஈடுபடுவதற்கு நல்ல ஒழுங்கு முறை ஒன்றைக் காட்ட, 16 காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## 01. மனதுருக்கத்தின் விரிவாக்கம்

உலகின் பட்டினிப்பிரச்சினை பற்றிப் பேசுவது இலகுவானது. நாம் உணவின்றி இருக்கும் பொழுதுதான் உண்மையான உடலின் தாக்கமும் உணர்வு பற்றிய விழிப்புணர்வும் ஏற்படும். நோன்பிருந்த ஒரு பெண் கூறினாள் "ஏழைகளின் பரிதாபமான நிலை பற்றிய எனது உணர்வு அதிகரித்தது. ஒரு நாளின் ஒரு நேர உணவு மட்டும் உட்கொண்டதால் நான் இளைத்துப்போனதுடன் வெறுப்படைந்தேன். இவ்வாறிருந்தும் நானாக விரும்பித்தான் நோன்பிருந்தேன். ஒவ்வொரு நாளும் ஒரு முறை உண்பதற்கு உணவு கிடைக்கும் அதிஷ்டம் பெறுபவர்களுக்கு எப்படி இருக்கும்? அதிலே நானும் பங்குபற்றியதன் பின்பு, அவர்களின் வேதனை பற்றி அக்கறை காட்டாது இருக்கமுடியாது.

## 2. சவாலுக்கு தயாராகுதல் :

விவிலியத்திலுள்ள மக்கள் வேதனைகள் மற்றும் சோதனைகளுக்கு முகம் கொடுத்த பொழுது செபத்தாலும் நோன்பாலும் அவற்றிக்கு விடை கண்டனர். எஸ்தர் ராணி தான் விவிலியத்திலுள்ள பெரிய உதாரணம். யூதரை அரசன் அழிப்பதில் இருந்து காப்பதற்காக மூன்று நாள் நோன்பிருக்கும்படி தனது மக்களைக் கேட்டிருந்தாள்.

## 03. உறுதியான மனோபாவம் :

கடந்த காலங்களில் முன்னோரின் பிழையான அபிப்பிராயம் நோன்பிற்கு கொடுக்கப்பட்டிருந்தது. உடலை வருத்துதல், செய்த பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுவது என்பன. அவை ஆரோக்கியமான ஆன்மீக வழிமுறைகளாக இருந்தாலும் ஆவியை உந்தித்தள்ள முன்னுரிமைகளை மாற்ற, இயேசுவுடன் நம்மை இணைத்துக் கொள்ள அவற்றைப் பயன்படுத்துவோம்.

## 04. தலைசிறந்த ஆன்மீகவாதிகளின் உதாரணம் :

உரோமையின் கிளேமென்ச் யோண் கிறிசோஸ்தும், பீற்றர் கிறிஸொலோகுஸ், ஜெரோம் மற்றும் அகுஸ்தீன் ஆகியோர் நோன்பினை இரக்கம் மற்றும் அன்புடன் தொடர்புபடுத்தினர். அகுஸ்தீன் உண்மையாக இப்படி கூறியிருந்தார். "இறைவனை நோக்கி உமது வேண்டுதல் பறந்து செல்ல வேண்டுமென விரும்புகிறீரா? அதற்கு இரு இறக்கைகள் கொடும். அவை : நோன்பும், தருமம் செய்தலும்.

## 05. மற்றவர்களுக்கு பயனுள்ளவை :

உணவு உட்கொள்ளாது சேமிக்கப்பட்ட பணத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். றொன் என்னும் சட்டத்தரணி நோன்பு மூலமாகச் சேமித்த பணத்தை குடியிருப்பு வசதியற்ற, குடியிருப்புச் சமுதாயத்திற்கு வழங்கினார்.

## 06. மேலதிக ஆன்மீகச் செயற்பாட்டிற்கான நேரம் :

ஒஸ்வாட் சேம்பர்ஸ் கூறியிருந்தார். "விவிலியத்தை வாசிப்பதற்கோ, வேண்டுதல் செய்வதற்கோ எனக்கு நேரமில்லையென சொல்லாதிருக்கக் கவனமாயிருங்கள். அதை விடுத்து எனது இவ்வேலைகளைச் செய்வதற்காக நான் என்னை ஒழுங்குபடுத்தவில்லை என்று சொல்லுங்கள். எனது உணவுகளை தவிர்க்கும் பொழுது வேண்டுதல்களுக்கு போதிய நேரம் உள்ளது.

## 07. ஆன்மாவிற்கு நன்மைகள் :

புனித தோமாஸ் அக்குவைனாஸ் கூறியிருந்தார், "கட்டுப்பாடில்லாது உண்ணும் முறை ஆன்மாவை இருட்டடித்து ஆன்மீக செயற்பாட்டினைப் பெறமுடியாமற் செய்கிறது. நோன்பிருப்பவர்கள் இந்தச் செயற்பாடு ஆன்மீகப் புதுப்பிக்கலுக்கு இட்டுச் செல்வதுடன் அதிகரித்த உள்ளுணர்வுகள், ஆழ்ந்த அர்ப்பணிப்பு, வாழ்வின் நோக்கம் பற்றிய தெளிவு, மற்றும் இறைவனுடனான கூடிய அந்தரங்க உறவு ஆகியவற்றையும் கொடுக்கிறது."

## 08. அப்பத்தினால் மட்டுமல்ல :

உடம்பிற்கு தேகபலத்தையும், சக்தியையும் உணவு தருகின்ற பொழுதிலும், நோன்பானது ஆன்மாவிற்கு ஊட்டத்தை அளிக்கிறது. இயேசுவே, இணைச்சட்டம் 8: 3-ல் கூறப்பட்டதுபோல "மனிதன் அப்பத்தினால் மட்டுமல்லாது ஆண்டவரின் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லாலும் வாழ்கின்றான்." (மத் : 4:4) எனக் கூறியுள்ளார்.

## 09. உலகத்தன்மையுடனான போராட்டம் :

"நீங்கள் மகிழ்ச்சியாக, சௌக்கியமாக, பிரபல்யமாக அல்லது புத்திசாலியாய் இருக்க இதைச் செய்ய வேண்டும் அதைச் செய்யவேண்டும் என்று கூறும் விளம்பரங்களால் இடைவிடாது அறிவுறுத்தப்படுகிறீர்கள்." என்கிறார் மான் எஸ்மஸ்லர். நோன்பிருந்தால் நாம் எமக்கு வெளியே உள்ளவற்றில், உணவு போன்றவற்றில் கூட முழுதும் தங்கியிருப்பதில்லை என்று உறுதிபடக் கூறமுடியும்.

## 10. அதிகரித்த சக்தி :

வெற்றிகரமான நோன்பு என்னும் நூலின் ஆசிரியரான ஜேர்மனியைச் சேர்ந்த கலாநிதி. ஹெல்முட்லுட்ஸ்னர், வலிமை, வேகம், விடாமுயற்சி, ஒருநிலைப்படுதல் ஆகியவை, உணவு உட்கொள்ளுதலின் பலாபலன்கள் அல்ல என்கிறார். மாறாக வயிறு நிறைந்திராத பொழுது நீர் நல்ல விதமாக சிந்திக்கிறீர். உ-ம் : மலையேறுபவர்கள், ஓட்ட வீராங்கனைகள்.

## 11. வாழ்விற்கு உரிய மதிப்பு :

வாரஇறுதியில் நோன்பிருந்த ஒருவர் நோன்பின் முடிவில், சாதாரணமான சூப்பைப் பருகினார். "இரு நாட்கள் உணவு இல்லாது இருந்தபின் சூப்பு நம்பமுடியாத அளவிற்கு சுவையுள்ளதாக இருந்தது. ஒவ்வொரு கரண்டி எடுத்ததும், பெரிய விருந்து உண்பது போல இருந்தது." என்று அவர் கூறினார்.

## 12. நற்பண்புகள் உயர்ந்து தீயவை குறைந்தன :

"எல்லாப் பெரிய நற்பண்புகளும் சுய ஒறுத்தலின் அடையாளத்தைக் கொண்டிருக்கும்." என்று வில்லியம் எல்லறி கூறினார். சுய ஒறுத்தலுடன் இணைந்த வேண்டுதல் செய்யும் நேரம் இருதயத்தினதும், ஆன்மாவினதும் எல்லைகளை விஸ்தரிக்கும்.

## 13. நோவும் இல்லை தைலமும் இல்லை :

வேதனையின்றி மகிழ்ச்சி இல்லை. வாழ்க்கையின் மென்மையான தன்மையை அதிகரிப்பதற்கு நோன்பு உறுதியான முன்ஆயத்தமாகும். "நோவு இல்லையேல் தைலம் தேவையில்லை. முள்ளின்றி சிம்மாசனம் இல்லை; வேதம் இன்றிப் புகழ் இல்லை; சிலுவையின்றி முடி கிடைக்காது." என்று வில்லியம் பென் கூறியுள்ளார்.

## 14. தேகாரோக்கியத்தில் முன்னேற்றம் :

உஷ்ணத்தை உருவாக்கும் கலோரி குறைவுபட்டவர்கள் ஆரோக்கியமாக, நீண்டகாலம் வாழ்வதாக, அதிகரித்து வரும் ஆதாரங்கள் காட்டுகின்றன. இதற்கு உதாரணம், ஒக்கினாவாவின் மக்களில், நூறு வயது தாண்டியவர்களில் விகிதாசாரம் கூடுதலாக உள்ளது.

## 15. மற்றவர்களுக்கு ஒளி :

தனது கடுமையான நோன்பின் மூலம் மகாத்மா காந்தி தனது நாட்டு மக்களுக்கும், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கும் அறிவு புகட்டினார். அதனால் இந்தியர் சுதந்திரம் பெற்றனர்.

## 16. கிறிஸ்துவைப் பின்பற்றுதல் :

இயேசு தனது பொதுவாழ்விற்கு முன்னதாக நோன்பிலும் வேண்டுதல்களிலும் நாற்பது நாட்கள் ஈடுபட்டிருந்தார். தன்னைப் பின்பற்றியவர்களும் நோன்பிருக்க வேண்டுமென அவர் விரும்பினார்.

**அருட்பணி.மா. றேஜிஸ் இராசநாயகம்**

# நெருக்கமான வாயில் வழியாக நுழைய வருந்தி முயலுங்கள்!

*- அருட் சகோ. றமேஸ் அமதி -*

நாம் வாழும் இவ்வுலகில் நமக்கென ஒரு நிலையான நகரம் இல்லை. பயணிகளாகவே இருக்கிறோம். பயணம் என்றால் பாதை வேண்டும். ஆனால் பாதைகளோ பலவிதமானவை. அவற்றுள் எத்தகைய பாதைகள் எமக்கு உண்மை வாழ்வை காட்டக் கூடியவை...

இயேசுவே எமது வழி (யோவான் 14:6). அவரால் அன்றி நாம் ஞான வாழ்வுக்குள் செல்ல முடியாது. ஞான வாழ்வை நோக்கி நாம் செல்லும் போது கரடுமுரடான, கல்லும், சேற்றுக் குழிகளும், முட்களும் நிறைந்த கடினமான பாதைகளினூடாகப் பயணிப்பதன் மூலமாகத்தான் அவ்வாழ்வின் குறித்த இடத்தை அடையமுடியும் என்பது எமது நம்பிக்கை. கானலிசைக்கும் குயில்களோ, குளிர்மை தரும் சோலைகளோ இப்பாதையில் இல்லாமலிருக்கலாம். சோர்வும், களைப்பும், வேதனையும், சோதனையும் நிறைந்த கசப்பான அனுபவங்கள்தான் இப்பாதையில் ஏற்படக்கூடியது. ஆனால் அதுவே எமக்கு வாழ்வைக் காட்டும் பாதை என்பதை நாம் மறந்து விடக்கூடாது. உலகப் பார்வையில் பாதைகள் எவ்வளவு எளிதாக இருக்கிறதோ அவ்வளவு விரைவாக குறிக்கோளை எட்ட முடியும். ஆனால் ஞான வாழ்வில் பாதை எத்துணை கடினமானதாக இருக்கிறதோ அத்துணை எளிதில் இறைவனை அடையலாம். மேடு பள்ளமான கடின பாதையாக இருப்பினும் இப்பாதையின் ஓரமாக இறையருள், மறைபோதகம் ஆகிய மின்விளக்குகள் வழிகாட்டியாக நின்று இருளைப்பற்றுகின்றன. "...என்னைப் பின்பற்றுபவன் இருளில் நடவான் ..." (யோவான் 8:12)

எளிதான வாழ்வை விரும்பி விரிந்த வழி செல்வோர் பலர். தவ வாழ்வை மேற்கொண்டு கிறிஸ்துவின் நெருக்கமான வழி செல்வோர் சிலர். இவர்களே மீட்படைவர். இவற்றின் மத்தியில் எமது வாழ்க்கைப் பாதை எத்தகையது? என்று நாம் எம்மையே கேட்டுப் பார்க்க வேண்டும். விடை பல கோணங்களில்வரினும், செபமும் தவமும் நிறைந்த பாதையூடாக பயணிக்கும் போதுதான் நாம் உண்மை வாழ்வை நோக்கி, நித்திய ஒளியை நோக்கி நடந்து சென்று கிறிஸ்துவில் முழுமையடைய முடியும் என்பது எமக்குத் தெளிவாகிறது. செப தவ வாழ்வில் நாம் பயணிக்க வேண்டுமெனில் எமது அளவு கடந்த ஆசைகளையும் விருப்பங்களையும் அடக்கியாள்வது மட்டுமல்லாது, இயற்கைக்கு இசைவான இச்சைகளை ஒறுத்து, எமது பலவீனங்களில் பக்குவப்பட்டு, சோதனைகளைக் கண்டு சோர்ந்துவிடாது, தீமையை ஒதுக்கி நன்மையை நோக்கி இயேசுவின் பாதையில் நாம் பயணிக்க வேண்டும்.

ஆனால் இன்றைய உலகில் வாழும் நாம் தெரிவு செய்யும் பாதைகள் எத்தகையவை என சிந்திப்போமேயானால் எமது உள்ளார்ந்த உண்மை நிலையினை நாமாகவே கண்டு கொள்ளமுடியும். நாம் தெரிவு செய்யும் பாதைகள் பொதுவாக, விரைவாகச் செல்லும் நெடுஞ்சாலைகள், சேறின்றி, தூசின்றி, தங்கு தடை எதுவுமின்றி காட்சி தரும் பாதைகள், இருமருங்கும் இயற்கை மின்னும் நடுவே தாருமிட்ட விரிவான தேசிய சாலைகள். இவ்வாறு எத்தனையோ பாதைகள் இருக்கலாம். ஆனால் இவையெல்லாம் எம்மை வாழ்வின் பாதைக்கு அழைத்துச் செல்வதில்லை. மாறாக அற்ப சுகம் தந்து பின்னர் முடிவில்லா துன்பத்தை வருவிக்கும்

(7ம் பக்கம் பார்க்க...)

# 2ம் வத்திக்கான் சங்கமும் பொதுநிலையினராகிய நாமும்

*- த.இ.ரங்கநாயகம் -*

திருச்சபையின் வரலாற்றில் நடந்தேறிய மிகவும் முக்கியமான பொதுச்சங்கமாக கருதப்படுவது இரண்டாம் வத்திக்கான் சங்கமாகும். இது திருச்சபையின் வரலாற்றில் கூட்டப்பட்ட 21வது பொதுச்சங்கமாகும். இச்சங்கமானது 1962ஆம் ஆண்டுக்கும் 1965க்கும் இடைப்பட்ட காலப்பகுதிகளில் நடைபெற்றது. மனிதனது கூர் அறிவினாலும், படைக்கும் ஆற்றலினாலும் உலகத்தில் மிக வேகமாக மாற்றங்கள் ஏற்பட்டு வரும் சூழ்நிலையில் அத்தகைய மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் திருச்சபையும் தன் பணிகளை புதுப்பித்துக்கொள்ள வேண்டும் மாற்றி அமைக்க வேண்டும் என்ற வகையில் அதுபற்றி சிந்தித்து புதிய முடிவுகளை எடுத்து செயற்பட வேண்டும் என்ற நோக்கிலேயே இச்சங்கம் கூட்டப்பட்டது. அந்த வகையில் முன்வைக்கப்பட்ட முக்கியத்துவப்படுத்தப்பட்ட புதிய சிந்தனைகளில் ஒன்றாக பொதுநிலையினர் பற்றிய சிந்தனைகள் காணப்படுகின்றன.

பொதுநிலையினர் ஆங்கிலத்தில் laity என அழைக்கப்படுகின்றனர். இது Laos (லாஓஸ்) என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து வருகிறது. இதன் பொருள் அதிகாரிகளிடம் இருந்து பிரிக்கப்பட்ட மக்கள் என்பதாகும். இந்த வகையில் திருச்சபையிலும் ஆரம்பத்தில் இருந்து முழு அதிகாரத்தோடு இருக்கின்ற திருநிலையினர் தவிர்ந்த சாதாரண விசுவாசிகளை குறிப்பதாக இச்சொல் பயன்பட்டு வருகின்றது.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் 'திருச்சபை' என்னும் கொள்கைத்திரட்டானது பொது நிலையினர் என்ற சொல் குரு குலத்தாரும் திருச்சபையின் இசைவு பெற்ற துறவற நிலையினரும் நீங்கலாக ஏனைய கிறிஸ்தவ விசுவாசிகள் எல்லோரையும் குறிக்கும் என்கிறது. மேலும் இவர்கள் திருமுழுக்கின் மூலம் கிறிஸ்துவோடு ஒருடலாகப்பெற்று இறைமக்களாக உருப்பெறுகின்றனர். தங்களுக்கே உரித்தான முறையில் கிறிஸ்துவின் குருத்துவ, இறைவாக்குரைக்கும், அரச அலுவல்களில் பங்கு கொள்கின்றனர் என எடுத்துரைக்கின்றது. எனவே திருமுழுக்கால் இயேசுக் கிறிஸ்துவோடு ஒருடலாக்கப்பட்ட பொதுநிலையினர் தமது உரிமைகளை அறிந்து கடமைகளை உணர்ந்து இறையாட்சிப் பணியில் ஈடுபடுதல் அவசியமாகும்.

(7ம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு தியானத்துளிகள்

அருட்திரு.யே.அ அருள்தாசன்

## தவக்காலம் 4ம் ஞாயிறு

' உன்னதத்தில் உயர்ந்தவரே இயேசுவே, எம்மையும் உம்மிடம் ஈர்த்துக்கொள்ளும்'

' இயேசு நிக்கதேமுவிடம் பாலை நிலத்தில் மோயீசனால் பாம்பு உயர்த்தப்பட்டது போல மானிடமகனும் உயர்த்தப்பட வேண்டும். அப்போது அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு கொள்வர்' என்றார் (யோவா 3:14-21)

தவக்காலம் விடுதலை தரும் காலம். பாவ அடிமைத்தனங்களில் சிக்குண்டிருப்போரை விடுதலை வாழ்விற்கு இட்டுச்செல்லும் பொற் காலம். பாவத்தின் கோர விளைவான அவலப்பாதாள உலகை அருட் செயலாம் உன்னத நிலைக்கு உயர்த்தும் யேசுவின் உயரிய சிலுவை வழியை உற்று நோக்கும் ஆன்ம ஈடேற்றத்தின் காலமும் தவக் காலமுமேயாகும்.

மனிதனின் தீச் செயல்கள் அழிவிற்கே அவர்களை இட்டுச் செல்கின்றன. அத்தோடு ஆண்டவரின் உடனிருப்பை, அவரது பிரசன்னத்தை சுருக்கிக்கொள்ளாமல் ஆலயங்களுக்குரிய மேலான உயரிய இடத்தை அவருக்குக் கொடுக்காமல் வாழ்வதும் அவரின் நெறிமுறைகளுக்குச் செவி கொடாமல் வாழ்வதும் மனிதனின் அழிவின் பாதைக்கே இட்டுச்செல்லுமென்ற பேருண்மை இறைவார்த்தை தரும் உன்னத பாடமாகும். இஸ்ராயேல் மக்களிடம் இறைவன் தம் தூதர்களை அனுப்பினார். 'ஆனால் அவர்கள் கடவுளின் தூதர்களை ஏளனம் செய்து, அவர்தம் வார்த்தைகளைப் புறக்கணித்து, அவர்தம் இறைவாக்கினர்களை இழித்துரைத்தனர்.' (2குறிப் பேடு36:16) இத்தகைய அக்கிரமத்தின் விளைவுகள் அம்மக்கள் துன்ப துயரத்தின் உச்சக்கட்டமாக அடைந்து வேதனையுற்றனர். பாபிலோனிய அரசின் அடிமைகளாக இஸ்ராயேலர் ஆனார்கள். 'கடவுளின் இல்லத்தை அவர்கள் எரித்து, எருசலேமின் மதில்களைத் தகர்த்தனர்: அங்கிருந்த அனைத்து அரண்மனைகளையும் தீக்கிரையாக்கி, விலையுயர்ந்த பொருட்கள் அனைத்தையும் அழித்தனர். மேலும் அவன் வாளுக்குத் தப்பியவர்களைப் பாபிலோனுக்கு நாடு கடத்தினான்.' (குறிப்பேடு 36:19-20)

இற்றைக்கு ஈராயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன் பாலஸ்தீன மண்ணில் நிகழ்ந்த வரலாறு, இன்று எம்மவனி மண்ணில் எதிரொலிக்கும் மனிதப்பேரவலம் எமது ஆன்மிகப் புதுப்பித்தலுக்கான அறைகூவலும் வெளிப்பாடாகும். எம் மண்ணின் அழிவடைந்த உடைமைகளின் சாம்பற் குவியல்கள், மனித பிணக்குவியல்கள், இரத்த வெள்ளம் இவற்றின் மத்தியிலிருந்து உயிர்தப்பி எழுந்த மக்கள் வீங்கிய விழிகளோடும், கனத்துப்படபடக்கும் நெஞ்சத்தோடும், நடைபிணங்களாக கதியற்று முகாம்களில் வாடும் போது அவர்களை உயர்த்திக் காக்கவல்லவர் இயேசு ஒருவரே என்பது வரலாறு தரும் உண்மைப்பாடம்.

'மனிதர் மீது நம்பிக்கை வைப்பதை விட, ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம்! உயர் குடியினர் மீது நம்பிக்கை வைப்பதை விட, ஆண்டவரிடம் அடைக்கலம் புகுவதே நலம்!' (திருபா118:8-9).

பழைய ஏற்பாட்டில் பாபிலோனியாவில் அடிமைப்படுத்தப்பட்டு துயருற்று, வருந்திய இஸ்ராயேலரை மீக இறைவன் தாமே பாரசீக மன்னனாகிய சைரசை கருவியாகப் பயன்படுத்தினார். 'பாரசீக மன்னனாகிய சைரசு என்னும் யாம் கூறுவது இதுவே: விண்ணகக்கடவுளாம் ஆண்டவர் மண்ணக அரசுகள் எல்லாவற்றையும் எனக்கு அழித்துள்ளார். மேலும் யூதாவிலுள்ள எருசலேமில் அவருக்குத் திருக்கோவில் எழுப்புமாறு எனக்குப் பணித்துள்ளார். எனவே, அவருடைய மக்களாக இருப்பவர் அங்கு செல்லட்டும்! கடவுளாம் ஆண்டவர் உங்களோடு இருப்பாராக!'. (2குறிப் 36:23)

புதிய ஏற்பாட்டில் இறைவனால் கிறிஸ்துவும் பாவத்திற்கு அடிமைப்பட்ட உலகில் பாவிகளை மீட்கும் அருளடையாளமானார். சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவால் பாவம் வெற்றி கொள்ளப் பட்டது. அதன் விளைவான சாவும் தோற்கடிக்கப்பட்டது. நாமும் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவை உற்று நோக்கி மனமாற்றம் காணும் போது: பாவத்தையும், சாவையும் வெற்றி கொள்வோம் என்பது திண்ணம். எமது தவக்காலத் தியானங்கள், பக்தி முயற்சிகள் யாவும் வெறும் பழக்கதோசங்களாக மட்டும் மாறிவிடாது, எமது உள்ளார்ந்த வாழ்வை மாற்றி இயேசுவிடம் எம்மை உயர்த்தும் வழிகளாக அமைவதாக.

## தவக்காலம் 5ம் ஞாயிறு

"இறைவா, உம்பாதம் பணிந்து, உம் வழி பற்றி, வாழ அருள் தாருமே! இடர்களையும் தாண்டும் பலம் தாருமே!"

"மானிடமகன் மாட்சி பெற வேண்டிய நேரம் வந்து விட்டது. கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்". (யோவா 12:24)

இலையுதிர் காலத்தில் பூத்துக் குலுங்கும் மரம்கூட இலைகளை உதிரச் செய்து வரண்ட தோற்றத்துடன் காட்சியளிக்கும். இவ்வாறு மரங்கள் இலை உதிர்த்தது மீண்டும் பசுமையான தோற்றத்துடன் கனிகளைக் கொடுக்கும் பயன் தருவதற்காகவே.

கிறிஸ்துவும் தான் கடுமையான துன்பப்பாடுகளை எதிர்கொண்டு மனித தோற்றமே அவரிடம் இல்லாத நிலையில் தோன்றினார். இவ்வாறு தான் பட்ட பாடுகள் மரணம் வாயிலாகத் தந்தையாம் இறைவனை மகிமைப் படுத்தினார். புகழ்ச்சியின் பலியை தந்தை இறைவனுக்குச் செலுத்தி அதை நிலைப்படுத்தினார்.

தந்தையே உம் பெயரை மாட்சிப்படுத்தும்" (யோவா 12:28). என்பதே இயேசுவின் இறுதிச் செபமாக அமைந்திருந்தது.

இயேசுக் கிறிஸ்து கீழ்ப்படிவுடன், துயருடனும் கூடிய சிலுவையின் புகழ்ச்சிப் பலியிருந்தில் பங்கெடுக்கும் நாமும் கிறிஸ்துவின் பாடுகளிலும் இறைபுகழ்ச்சியிலும் பங்கெடுத்து அதன் வாயிலாக இறைமாட்சியில் பங்காளிகளாகும் அழைப்பைப் பெறுகிறோம்.

இந்நிலையிலுள்ள நாம் இறைவிருப்பத்திற்குக் கீழ்ப்படிவுள்ளவர்களாகவும், இடர்கள், சவால்கள், நெருக்கீடுகள், துன்பங்களையும் எதிர்கொண்டு வாழும் வலுவை எமது உடைமையாக்கும் அவசியமும் எமக்குண்டு. துன்பங்கள் மத்தியிலேயே இலட்சியங்களும், உறவுகளும் உறுதியும், திடமும் பெறுகின்றன.

உறுதியான இலட்சியத்தை உடைய ஒருவன் தன்னைப் பின் வாங்கச் செய்யும் சிந்தனைகளைச் சீர்படுத்தி இருளின் பயத்தை நீக்கிக் கதிரவனாய் எழுகிறான். வாழ்வின் நோக்கம் உணராதவன் நிம்மதி இழக்கிறான்.

இயேசுவும் தன் வாழ்வின் இலட்சியத்தை உணர்ந்ததால் தன் மனித இயல்பு மத்தியிலும், துயர் மிக்க மரணத்தை முழுமனதுடன் வரவேற்றார்.

"இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், தம்மைச் சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்த குரல் எழுப்பி, கண்ணீர் சிந்தி மன்றாடி வேண்டினார். அவர் கொண்டிருந்த இறைப்பற்று கலந்த அச்சத்தை முன்னிட்டு கடவுள் அவருக்குச் செவிசாய்த்தார். அவர் இறைமகனாயிருந்தும், துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார்." (எபி 5:7-8)

கீழ்ப்படிவு என்ற ஏணிப்படிகள் ஒருவனை வாழ்வின் உன்னத நிலைக்கு உயர்த்த வல்ல ஆற்றல் வாய்ந்தவை என்பதில் ஐயமில்லை.

"அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்குக் கீழ்ப்படிந்து தன்னையே தாழ்த்திக் கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்." (பிலி 2:8-9)

சொகுசு மிக்க சீவியம் நிறையவே வேண்டும். நினைத்ததெல்லாம் உடனே வேண்டும். பெற்றோர் பெரியோர் குறுக்கிடாத சுதந்திர வாழ்க்கை வேண்டும். முயற்சியும் உழைப்பும் இல்லாமற் பயனும் வேண்டும் என்ற குறுக்குவழி, சொகுசு, இன்பநுகர்ச்சிப்பிரியர்களாக, இலட்சியமில்லாத இளைய தலைமுறையினர், அழிவின் பாதாளத்திற்குள்ளே தம் எதிர்காலத்தை தொலைக்கின்ற அபாயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் இயேசுவின் சிலுவை வழியை அனைவருமே பின்பற்றி, எமதாக்குவதே எமது வாழ்வின் அவசர தேவையாகும்.

## அமரர் மேரி பஸ்ரியன் அடிகளாரின் 24வது நினைவு தினம்



1985ஆம் ஆண்டு வங்காலையில் இலங்கை இராணுவத்தால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட வங்காலைப் பங்குத்தந்தை அமரர் மேரி பஸ்ரியன் அடிகளாரின் 24வது நினைவு தினம் கடந்த 06.01.2009 அன்று வங்காலையில் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்டது.

அன்றைய தினம் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அடிகளாரின் திரு உருவச் சிலைக்கு முன்னால் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன. வங்காலைப் பங்குத்தந்தை அருட்பணியாளர் ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் இந்த நிகழ்வுகளை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

மேரி பஸ்ரியன்அடிகளார் படுகொலை செய்யப்பட்டதற்கு கண்கண்ட சாட்சிகள் இருந்தும் அவர் இந்தியாவுக்கு படகு மூலம் தப்பிச் சென்று விட்டார் என அன்றைய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறியது குறிப்பிடத்தக்கது.

# தாவலன் கண்மணிகள்

கண்மணிகளே!

## தவக்காலம் பயனுள்ளதாக மாறிட உங்களுக்கு சில அறிவுரைகள்

கடந்த காலத்தில் நாம் செய்த பலவீனமான தீமைகளைக் குறித்து மனம் வருந்தி மனம் திரும்பி பாவங்களுக்காய் செய்ய வேண்டிய காலம்தான் தவக்காலம். தவக்காலத்தில் நம்மிடம் காணப்பட வேண்டிய மனநிலை என்ன? தவக்காலத்தில் நாம் செய்ய வேண்டியது என்னவென்று இறைவார்த்தை நமக்குக் கற்பிக்கின்றது.

சக்கரியாஸ் 7,9,10 நேர்மையுடன் நீதிவழங்கவேண்டும். ஒருவருக் கொருவர் அன்பும், கருணையும் காட்டவேண்டும். கைம்பெண்களையோ, அனாதைகளையோ, அன்னியரையோ ஏழைகளையோ ஒடுக்கக்கூடாது. சகோதரர்க்கு தீமை செய்ய மனதாலும் நினைக்கக்கூடாது. மத் 6:30 மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்ட வேண்டும். உடலையும், அதன் உலக இச்சைகளையும் கட்டுப்படுத்தலாம். நம்முடைய மற்றும் பிறருடைய பாவங்களுக்காய் கழுவாய் செய்யவும் நாம் பயன்படுத்த வேண்டிய காலம்தான் தவக்காலம். இறைவனோடு, உறவாடி சகோதர அன்பில் வளர்ந்து, எம் வாழ்வின் வரும் துன்பங்களை ஏற்று தூய்மை பெற வேண்டிய மனநிலையுடன் விழிப்பும் செபமும் மட்டுமல்லாமல், மனம்மாறி மனம் வருந்தவும், ஆயத்தமாக வேண்டிய காலம்தான் தவக்காலம்.

நாம் எமது வாழ்வைக் குறித்துச் சற்றுச் சிந்திப்போம்? ஆய்ந்தறிவோம். பாவங்களை அறிக்கையிடுவோம். தினமும் திருப்பலியில் கலந்து கொள்வோம். ஆன்மீக வளமை பெறுவோம். இத்தவக்காலம் நமக்கு இறை ஆசீரின் காலமாக அமைந்திட, பாலை நிலத்தில் நாற்பது இரவு, பகல் நோன்பிருந்து அலகையை வென்ற எம் பெருமான் யேசு எல்லோருடைய வாழ்விலும் துணை செய்வாராக?

சே. மேரி பந்திமா
புனித யாகப்பர் ஆலயம், குருநகர்.

## விழித்திரு மாணவர்களே விழித்திரு

* கல்வி என்பது ஒவ்வொரு மாணவர்களினதும் உயிர் மூச்சுக் காற்றாக இருக்க வேண்டும்.
* கல்வி வரும் எனக் காத்திருக்காதே மாணவனே. அது வாழ்க்கை இலட்சியம் இல்லாதவனின் கனவு.
* விழித்திரு மாணவனே. விழித்திரு உனக்காக இல்லாவிட்டாலும் உன் எதிர்கால சந்ததியினருக்காகவது விழித்திரு.
* உன் அறிவுக்கு எட்டுமளவுக்காவது கற்பது உனக்கு நல்லது.
* எழுந்தாயதும் உன்னவரை நம்பிக்கையோடு போராடு. மாணவனே வெற்றி உனக்கு நிச்சயம்.

## விடுகதை

★ குதிகுதித்தாள் பல் இளித்தாள்: அவள் யார்?
சோளம்பொரி
★ அடியெடுத்து வைக்கவே அரை மணியாகும்: அது என்ன?
நத்தை
★ பார்வைக்கு அழகு கண்ணுக்குப் பார்வை அது என்ன?
கண், கண்ணாடி
★ பூக்களில் ஒழிந்திருப்பான் நாவிற்கு இனிப்பானவன் அவன் யார்?
தேன்
★ பாட்டுப் பாடவா, பார்த்துக் கடிக்கவா, இரத்தம் குடிக்கவா, அவன் யார்?
நுளம்பு
★ உடல் இல்லாமல் ஊரெல்லாம் திரிவான் அவன் யார்?
புகை
★ காற்றைக் குடிப்பான் காற்றால் பறப்பான் அவன் யார்?
பலூன்
★ இருட்டில் வரமாட்டான் வெளிச்சத்துக்கு வருவான் அவன் யார்?
நிழல்
★ சொறியனைக் கறிசமைக்க சோறெல்லாம் கசப்பு அது என்ன?
பாகற்காய்
★ ஊதியம் வாங்காமல் உழுபவன் யார்?
மண்புழு

உலகராசா சோபனா
அல்லைப் பிட்டி
(சந்கோட்டை)

## பேசும் தெய்வம்

டோனி என்ற சிறுவன் பள்ளிக்குச் செல்லும் வழியில் உள்ள கோயிலுக்கு தினமும் சென்று இயேசப்பா நான் பள்ளிக்கு போயிட்டு வரேன்னு டாட்டா கூறி வருவான். ஒருநாள் பள்ளி சென்ற சிறுவனை காணாது தாய் தேடி அலைந்து கடைசியில் கோயிலுக்குள் நுழைந்தாள். அன்று அவன் பள்ளிக்குச் செல்லாமலே கோயிலிலே இருந்தான். தாய் அவனிடம் விபரம் கேட்டபோது பையன் சொன்னான். "நான் தினமும் வந்து இயேசப்பாவிடம் சொல்லிவிட்டு டாட்டா காண்பித்துவிட்டு செல்வேன். ஆனால் அந்த இயேசப்பா என்னிடம் எதுவும் பேசமாட்டார். எனவே இன்று அவர் பேசாமல் இந்த இடத்தை விட்டு நகர மாட்டேன்" என்று சொல்லி அழ ஆரம்பித்தான்.

நீண்ட நேரத்தின் பிறகு "மகனே அழாதே இதோ நாம் பேசுவோம்" என்ற குரல் கேட்டு திரும்பிப்பார்க்கையில் இயேசப்பா நின்றிருந்தார். இருவரும் நீண்ட நேரம் பேசிக்கொண்டே இருந்தோம். இரவானது கூட எனக்குத் தெரியவில்லை" என்று சந்தோசத்துடன் சொன்னான். மகனின் இறையன்பை கண்டு தாய் வியந்து இன்புற்றாள்.

சிந்தனை : எத்தனையோ கோயில்களின் படிகளில் நாம் ஏறி இறங்கி படிகள்கூட உருமாறிவிட்டன. ஆனால் இன்னும் நம் வாழ்வு மாறவில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலத்தில் செபிப்பதற்கு 8 வழிகள்

– அருட்பணி. மா. ரேஜிஸ் இராசநாயகம் –

எமது வாழ்வில் ஒரு முக்கிய நிகழ்வை, உதாரணமாக ஒரு கொண்டாட்டம் அல்லது சிறப்பான நிகழ்வினை எதிர்நோக்கும் பொழுது, நாம் என்ன செய்கிறோம்? நாம் அதற்கான ஆயத்தங்களைச் செய்கிறோம். பரிசுத்தவாரமும் உயிர்ப்பு விழாவும் திருச்சபை வழிபாட்டு ஆண்டிலும் ஒரு கிறிஸ்தவனின் ஆன்மீக வாழ்விலும் "பெரிய நிகழ்வுகள்" ஆகும். எனவே, கிறிஸ்தவர்களின்ற முறையில் தவக்காலத்தின் நாற்பது நாட்களும் நாம் ஆன்மீகரீதியாக எம்மை தயார் செய்கிறோம். அதாவது தவக்காலத்தில் நாம் எம்மை மீள அர்ப்பணிக்கிறோம். உலகில் செபிப்பவர்கள் பலர் உள்ளது போல், செபிப்பதற்கும் பல வழிகள் உள்ளன. ஆனால், குறிப்பாக சில செபிக்கும் முறைகள் தவக்காலத்தில் எம்மை ஆன்மீக ரீதியாக தயார் செய்ய உதவும்.

1. உங்கள் ஒறுத்தலை செபமாக்கவுள்ள செபம் ஆக்குங்கள். கத்தோலிக்கர் என்ற முறையில் தவக்காலத்தில் சில காரியங்களை விட்டுவிடும்படி எமக்கு அறிவுறுத்தப்படுகிறது. சொக்லேட், கோப்பி, அதிகளவு உணவு உட்கொள்ளல், வீடியோ விளையாட்டுக்களில் அல்லது தொலைக்காட்சி பார்ப்பதில் ஒரு மணித்தியாலம் குறைத்துக் கொள்ளல். (அது எதுவாக இருந்தாலும் உங்கள் ஒறுத்தலை ஒரு செபமாக, செயலுடன் கூடிய ஒரு செபமாக ஆக்குங்கள்.) நீங்கள் தவிர்க்கும் பொருளைக் காணும் பொழுது அல்லது நீங்கள் வழமையாக தினமும் அதை அனுபவிக்கும் நேரத்தில் அப்பொருள் இல்லாமலும் கடவுளிடம் முழுமையாக இருப்பதை உணர்ந்து அதற்காக ஒரு கணம் செபியுங்கள். இவை இல்லாமலேயே நீங்கள் முழுமையாக இருக்கிறீர்கள் என்ற சுதந்திரத்திற்காக கடவுளுக்கு நன்றி கூறுங்கள். அதே நேரம் இந்தக் கொடை உலகில் இருப்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

2. தனிப்பட்ட செபமுறை உங்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். தவக்காலம் ஆன்மீக புதுப்பித்தலுக்கான காலம். தியானத்திற்கான வழிகாட்டல், நூல்களை அல்லது ஆன்மீக சிந்தனை தரும் நூல்களை பயனுள்ள முறையில் பயன்படுத்தலாம்.

3. சிலுவைப் பாதையைச் செபிக்கவும். தவக்காலத்தில் மிகவும் பொதுவான பாரம்பரியங்களில் ஒன்று சிலுவைப்பாதை செய்தல். பெரிய வெள்ளி நிகழ்வுகளில் பங்கு பற்றவும், உயிர்ப்பு விழாவினை கொண்டாடவும், ஆயத்தம் செய்வதற்கு கிறிஸ்தவர்களின் பாடுகள், மரணத்தை ஆழ்ந்து சிந்திக்க இந்த வழிபாடு உதவுகிறது.

4. திருப்புகழ் மாலையுடன் விவிலிய நூல்களைத் தியானிக்கவும். (குறிப்பாக குருக்கள், துறவியர்) கிறிஸ்தவர்களிற்கு தெரிந்த விவிலிய செபங்களில் மிகவும் பழமையானது திருப்புகழ் மாலையாகத்தான் இருக்கக்கூடும். (Lectio divina). இந்தச் செபிக்கும் முறையில் திருமறை நூலில் இருந்து ஒரு பகுதியை மெதுவாக வாசித்து சிந்தித்து முக்கியமான சொற்களை அல்லது சொற்றொடர்களை மீண்டும் மீண்டும் உச்சரித்து தியானிக்க வேண்டும். விவிலிய வார்த்தைகள் மனித இதயத்தில் இறைவார்த்தையாக ஒலிக்கவும் கடவுளுக்கு பதிலளிப்பதாக எமது இருதயத்தில் சிந்தனைகளை வெளிப்படுத்தவும் உதவுகிறது என்ற தவசிகளால் திருப்புகழ் மாலை உருவாக்கப்பட்டது. இந்தவிதத்தில் திருப்புகழ் மாலையானது இறைவனுடன் ஆழமான உறவுக்கு இட்டுச் செல்கிறது.

5. திரு வழிபாட்டுச் செபங்களை ஆழமாக தியானியுங்கள். தவக்காலத்தில் திருப்பலியில் பங்கு பற்றும் பொழுது வழிபாட்டில் செபிக்கும் வார்த்தைகளில் கருத்தூன்றி தியானிக்கவும். உதாரணமாக நற்கருணைச் செபம் திருப்பலியின் உச்சகட்டமாக தவக்காலத்தில் விசேட உட்பொருளுடையது. நற்கருணை பெற்றுக் கொண்டபின் சற்று அமர்ந்திருந்து திருச்சபையின் சிறப்பான இம்மன்றாட்டில் ஆழமாக சிந்தனையைச் செலுத்த நீங்கள் விரும்பலாம்.

6. ஒரு செபக்குழுவில் இணையுங்கள் அல்லது ஒரு குழுவை உருவாக்குங்கள். மற்றவர்களுடன் இணைந்து செபிப்பதில் பல அனுகூலங்கள் உண்டு. குழுச் செபத்தில் நல்ல முன்மாதிரிகள், ஆதரவு, ஊக்குவிப்பு, வித்தியாசமான காட்சி அமைவுகள், கிறிஸ்தவ வாழ்வில் வளர்வதற்கு வேண்டிய தூண்டுதல் ஆகியவற்றை நீங்கள் அனுபவிக்கவும், பிறருக்கு அளிக்கவும் முடியும். இதனை ஆரம்பிப்பதற்கு இலகுவான வழியாக உமது வாழ்க்கைத் துணை, ஒரு குடும்ப அங்கத்தினர் அல்லது நெருங்கிய நண்பரை தவக்காலம் முழுவதும் கிரமமாக உம்முடன் செபிக்கும்படி அழைக்கலாம். உமது பங்கு ஆலயத்துடன் தொடர்பு கொண்டு பங்கிலுள்ள செபக்குழுக்கள் அல்லது செப வட்டங்கள் பற்றி விசாரித்து அவற்றில் சேருங்கள்.

7. பிள்ளைகளுடன் அல்லது குடும்பமாக செபியுங்கள். பெற்றோராகவோ, பாதுகாவலராகவோ, ஆசிரியராகவோ இருப்பது ஒரு புனிதமான பணியும், பரிசுத்த உடன்பாடுமாகும். நீங்கள் செபிப்பதை பிள்ளைகள் பார்ப்பதாலும், கேட்பதாலும் ஒன்றிணைந்து செபிப்பதாலும் உங்கள் விசுவாசத்தை அவர்களுக்கு அளியுங்கள். குடும்பமாக உணவு உட்கொள்ளும் நேரத்தை தவக்காலத்தில் குடும்பச் செபத்தை ஆரம்பிக்கவும், புத்துயிரூட்டவும் நல்ல சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

8. தவக்காலத்தின் பின்பும் தொடரக்கூடிய நாளாந்தம் செபிக்கும் பழக்கத்தை ஆரம்பியுங்கள். தவக்காலம் முடிந்த பின்னரும் செபிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவது ஒரு நல்ல செபிக்கும் ஆலோசனையாக இருக்கும். குழுச் செபத்தில், நல்ல முன்மாதிரிகை, ஆதரவு, ஊக்குவிப்பு வித்தியாசமான காட்சி அமைவுகள், கிறிஸ்தவ வாழ்வில் வளர்வதற்கு வேண்டிய தூண்டுதல் ஆகியவற்றை நீங்கள் அனுபவிக்கவும் பிறருக்கு அளிக்கவும் முடியும்.

ஆகவே உங்கள் தவக்கால செபத்துள் மகிழ்ச்சியுடன் ஈடுபடுங்கள். மேற்குறிப்பிட்ட எல்லாவற்றையும் கடைப்பிடிக்க வேண்டுமென்று நினைக்காதீர்கள். இந்த செபிக்கும் முறைகளில் ஒன்றையோ, இரண்டையோ தெரிவு செய்து அதில் கவனம் செலுத்துங்கள். இதன் மூலம் உயிர்ப்பு ஞாயிறு நோக்கிய தவக்கால யாத்திரையில் முழுமையாக ஈடுபட முடியும்.

# வள(னா)ர் பப்பா பதில்கள்

**1. கேள்வி :** வளனார் பப்பா! திருப்பலியில் நற்கருணை விருந்தின் போது பிழைதீர்க்கும் மந்திரம் (சர்வ தயாபர இயேசுவே...) பாடலாமா?

மரியநாயகம், பண்டியந்தாழ்வு.

**பதில் :** திருவழிபாட்டு ஒழுங்கின்படி நற்கருணை விருந்து வழங்கப்படும் போது நற்கருணை ஆராதனை பாடல்கள் அல்லது நற்கருணையின் மகத்துவத்தை எடுத்தியம்பும் பாடல்கள் பாடப்படுவது முறைமையானதாகும். தவக்காலத்தில் பல ஆலயங்களில் இவ்வேளையில் பிழை தீர்க்கும் மந்திரம் பாடுகின்ற ஒரு வழக்கம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. இதனை பாடுகின்ற வேளையில், தாம் பெற்றுக்கொண்ட நற்கருணை ஆண்டவரின் பாடுகள், மரணத்தில் நெருக்கமாக இணைந்து கொள்ளவும், தமது பாவங்களுக்காக நற்கருணை ஆண்டவரிடம் மன்னிப்பு வேண்டவும் இம் மந்திரம் துணைசெய்வதாக பலரும் சான்று பகர்கின்றார்கள். எனவே, தவக்காலத்தில் செய்யப்படும் இவ்வழக்கம் தவறானது என்று கூறமுடியாது. இதனால் இவ்வழக்கம் இல்லாத ஆலயங்களில் இதனை பாடத் தொடங்கலாம் என்று நான் கூற விழையவில்லை. நற்கருணைக் கொண்டாட்டத்திற்கு பொருத்தமான பாடல்களை தொடர்ந்து பாடுவதே சிறந்தது.

**2. கேள்வி :** வளர்ப்பப்பா! வேதாகமத்திற்கு நாம் தூபம் காட்டுகிறோம். தற்பொழுது pen drive, இறுவட்டு போன்ற இலத்திரனியல் சாதனங்களில் வேதாகமம் வெளிவருகிறது. எனவே இவற்றுக்கும் தூபம் காட்டலாமா?

ரஜீவ், பிரசாந்த், டி மசனட் இறையியலகம்.

**பதில் :** இறைவன் எல்லா இடமும் வியாபித்திருக்கிறார் (The Omnipresence of God) என்பது இறைவனுடைய ஒரு பண்பாகும். (The attributes of God ல் படித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.) இதை வைத்துக் கொண்டு வீதியோரத்தில் நிற்கும் ஒரு வேப்பமரத்திற்கு (இறைவன் அம்மரத்திலும் இருக்கிறார் என்ற உணர்வுடன்) நீங்கள் தூபம்காட்டினால் வீதியால் செல்பவர்கள் உங்களை பைத்தியங்களென்று எண்ணமாட்டார்களா?

இறைவனுடைய வார்த்தை அச்சிடப்பட்ட வேதாகமப் புத்தகத்தில்தான் அதிகாரபூர்வமாக இருப்பதாக திருச்சபை எமக்கு கற்பிக்கிறது. (பைத்தியம் என்ற பெயர் எடுக்காமல் காத்துக் கொள்வது இப்போது உங்கள் பொறுப்பு.)

**3. கேள்வி :** தவக்காலத்தில் நோயாளர் இறைவிசுவாசத்துடன் ஒருசந்தி பிடித்துவருவது கடவுளுக்கு ஏற்புடையதா?

செல்வராணி, சுன்னாகம்.

**பதில் :** ஒருசந்தி பிடிப்போர், நோயாளர் என்றால், இறைவிசுவாசத்துடன் ஒருசந்தி பிடிப்பதைவிட, இறைவிசுவாசத்துடன் வைத்தியசாலை சென்று வைத்தியரின் ஆலோசனை பெற்று அதற்கேற்ப நடந்து கொள்வதுதான் இறைவனுக்கு பிரியமானது. செயலோடு கூடிய விசுவாசம் விரும்பத்தக்கதல்லவா!

**4. கேள்வி :** எமது கடமைகளை சரிவரச் செய்யாது எந்நேரமும் ஆலயம்தான் தஞ்சமென்று இருப்பது எவ்விதத்தில் பொருத்தமானது?

**பதில் :** விமானம் குண்டு வீச வரும்போது ஆலயமே தஞ்சமென்று ஓடுகிறோம். ஆகவே வாழ்வில் ஆலயமே (இறைவனே) தஞ்சமென்றிருப்பது மிகப்பொருத்தமானது. ஆனால் "கடமைகளை சரிவரச் செய்யாது..." என்பதுதான் 'உதைக்கிறது.' கடவுளும் கடமையும் தண்டவாளம் போல அருகருகே செல்லவேண்டும். (இரண்டில் ஒன்றையாவது விட்டுவிடுவது அதில் தலைவைப்பதற்கு சமம்.)

**5. கேள்வி :** வளனாரே! திருமணத் திருப்பலியில் நல்ல நேரம் (சுபமுகூர்த்தம்) பார்த்து வைப்பது சரியா?

மகிமைதாஸ், சுன்னாகம்.

**பதில் :** உமது பங்குத்தந்தை, ஞாயிறு திருப்பலியை விடியற்காலை 2.47 மணிக்கு வரும் சுபவேளையில் ஒப்புக்கொடுக்கப்போவதாக அறிவித்தால் உமது கதி என்னவாகும்? "காலங்கள் அவருடையன..... யுகங்களும் அவருடையனவே" என்கிறது பைபிள். "நாளும், கோளும் நம்மை என்ன செய்யும்?" என்கிறார் திருஞானசம்மந்தர். எல்லோருக்கும் வசதியான நேரமே நல்ல நேரமாக இருக்கட்டுமே!

**6. கேள்வி :** அன்புள்ள வளனாரே அழுக்குப் படிந்த செருப்பை அணிந்து கொண்டு ஆலயத்தினுள் செல்வோர் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

தர்சிகா, பண்டத்தரிப்பு

**பதில் :** அழுக்குச் செருப்பை வெளியே கழற்றி விட்டு, உள்ளே செல்ல வேண்டும். வெளியே வந்ததும் அதைப் போட்டுக் கொள்ள வேண்டும். அப்படியே மனதின் அழுக்கையும் வெளியே கழற்றி விட்டு உள்ளே செல்ல வேண்டும். ஆனால் வெளியே வந்து மீண்டும் அதைப் போட்டுக் கொள்ளக் கூடாது ஒரு செருப்பைப் போல!

இரண்டாவது அழுக்கு ஆன்மாவையே கறைப்படுத்துமே. யாராச்சும் அதைப் பற்றி கவலைப்படுகின்றார்களா?

(சரி, வெளியே கழற்றிவிடும் செருப்புக்கு, நீர்தான் இனிபொறுப்பு)

**7. கேள்வி :** அன்புள்ள பப்பாவுக்கு, அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பொன்றில் 10இலட்சம் ரூபா விழுந்தால், அதை என்ன செய்வீர்?

றோய், நெடுந்தீவு.

**பதில் :** அதில் 5 இலட்சத்தினை பாதுகாவலன் பணிமனைக்கும், மிகுதி ஐந்தை உமக்கும் அனுப்பிவிடுவேன். பின் எழுந்து கட்டிலில் இருந்தபடியே காலைச் செபம் சொல்வேன். (கனவு மெய்ப்பட வேண்டுமென்று!!! ஹி ஹி ஹி...)

**8. கேள்வி :** பப்பா, யாழ் வீதிகள் பொதுவாகக் குறுகியவை, அப்படி இருக்கும்போது, இளைஞர்களும், யுவதிகளும், சைக்கிள்களில் பக்கம் பக்கமாக (Parallel) செல்வதால் மற்றவர்கள் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றார்களே?

சுரேஷ், யாழ்

**பதில் :** வீதிகள் மட்டுமல்ல, மனங்களும்தான்! மற்றவர்களும் பயணிக்க வேண்டுமென்று இவர்கள் சிந்திக்காது இருப்பது வேதனைக்குரியது. ஏற்கனவே, காயப்பட்டோர் பட்டியல் எமது செய்தித்தாள்களைத் தினமும் அலங்கரிப்பது தெரியவில்லையா? சைக்கிள்தாரிகளே கொஞ்சம் பிறர் நேசம் காட்டுங்கப்பா!

# மன்னிப்புக்கான சில வழிகாட்டல்கள்

இன்றைய சூழலில் நம் ஒவ்வொருவருக்கும் தேவையானது இதயபூர்வமான மன்னிப்பு என்பதை மனதில் கொள்ளவும்.

1. மன்னிப்பு என்பதன் அர்த்தம் வன்மத்தை மறப்பது அல்லது தண்டிக்க வேண்டுமென்பதை விட்டுவிடுவது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

2. தினமும் சில நிமிடங்கள் உமது சிந்தனைகளைத் தூய்மைப்படுத்துவதில் செலவிடுங்கள். உமது இதயத்தில் வளர்ந்து புரையோடாதிருக்க ஆதாரமற்ற உறுத்தல்கள் எதிர்மறையான சிந்தனைகளை அகற்றி விடுங்கள்.

3. பெரிய தீங்குகளை மன்னிப்பதற்கு முன் அப்பியாசமாக சிறிய தீங்குகளை மன்னித்துப் பழகவேண்டும்.

4. உமது விருப்பத்திற்கேற்ப மற்றவர்கள் செயற்படவேண்டுமென்றோ உமது எண்ணங்களை பிறர் ஏற்க வேண்டுமென்றோ எதிர்பார்ப்பதை விட்டுவிடுங்கள்.

5. வன்மம் பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். காழ்ப்புணர்வு மனத்தையும் உள்ளத்தையும் பாதிப்பதுடன், உடலில் சக்தியையும் உறிஞ்சி விடும். அவை உம்மை ஆட்டிப்படைத்து கோபமூட்டி மனச் சோர்வடையச் செய்து, உடல் ரீதியான நோய்களையும் உண்டாக்கக்கூடும்.

6. வன்மம் மற்றவர்களுக்கு உங்கள் மேல் ஆதிக்கத்தைக் கொடுக்கும். வெறுப்பினால் உம்மைச் சிறுமைப் படுத்த எவருக்கும் இடமளிக்காதீர்.

7. வன்மத்தின் அதிர்வலைப் பாதிப்புக்களை அறிந்து கொள்ளுங்கள். உங்கள் காழ்ப்புணர்வு ஒரு முழுக் குடும்பத்தையே நஞ்சூட்டி எல்லோரின் வாழ்வையும் பாழாக்கிவிடும்.

8. வன்மத்தை குழிதோண்டிப் புதையுங்கள். உமக்குத் தீங்கிழைத்தவருக்கு ஒரு கடிதம் எழுதுங்கள். ஆனால் அதை அஞ்சலில் சேர்க்க வேண்டாம். உங்கள் உணர்ச்சிகளையும், கோபத்தையும் அதில் வெளிப்படுத்துங்கள். முடிவில் அவருக்கு மன்னிப்பளிப்பதாகக் கூறுங்கள். அதன்பிற்பாடு அந்தக் கடிதத்தினை குறிப்பான ஒரு இடத்தில் புதையுங்கள்.

9. உடனடியாக மன்னிப்புக் கொடுப்பதற்கு முயற்சியுங்கள். வன்மங்கள் உங்கள் தனிப்பட்ட வாழ்வில் நெருக்கடியை உருவாக்கும். ஒரு குருவானவர் மன்னிப்புக் கோரும் பாவியொருவருக்கு உடனடி மன்னிப்பு வழங்குவதுபற்றி சிந்தித்துப் பார்த்து, நீங்களும் மற்றவர்களுக்கு பாவமன்னிப்பு வழங்குவதற்குத் தீர்மானியுங்கள். "இறைவனின் பெயரால் நான் உமக்கு மன்னிப்புக் கொடுக்கிறேன். சமாதானத்தில் சென்றுவாரும்" என்று உரத்துக் கூறுங்கள். அப்படியே அதை விட்டுவிட்டு உங்கள் வாழ்வினைத் தொடருங்கள்.

10. மன்னிப்பென்பது உமக்கு நீர் அளிக்கும் கொடை என்பதை மறந்துவிடவேண்டாம். நாஸி தடுப்பு முகாம் ஒன்றில், இரண்டு கைதிகள் பேசிக் கொண்டிருந்தனர் "நாஸிகளை மன்னித்து விட்டீரா?" என ஒருவர் கேட்க, மற்றவர் "ஆம்" என்றார். முதலாமவர் "என்னால் முடியவில்லை. அவர்கள் மீது என் உள வன்மம் நிறைந்துள்ளது" என்று கூறினார். அப்போது அவரது நண்பர் "அப்படியானால் அவர்கள் உம்மைப் இன்னும் சிறையில் வைத்திருக்கின்றனர்" என்று கூறினார், கசப்புணர்வும் கோபமும் உம்மை உள்ளத்தில் சிறைப்படுத்துகின்றன. மன்னிப்பது உம்மை விடுவிக்கின்றது. கடவுள் எப்பொழுதும் நிபந்தனை அற்ற மன்னிப்பு வழங்குகிறார். எமக்கெதிராக எதையும் வைத்திருப்பதில்லை. சமாதானத்தை நாம், அமைதியுடனும் வாழ்வதற்கு, மெய்ச் சுதந்திரம் அளிக்கிறார்.

11. மன்னிப்பென்பது கடவுள் மன்னிப்பளிப்பது போன்று உண்மையே நீர் மன்னிப்பது என்பதனை நினைவில் கொள்ளவும். பொய்யான குற்றவுணர்வுகள் குற்றச் சாட்டுக்களில் இருந்து விடுபடுங்கள்.

– அருட்பணி. மா. ரேஜிஸ் இராசநாயகம் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரித்தாஸ் கியூடெக்
HUDEC — எரியும் மடல் — Caritas
யாழ்.கத்தோலிக்க திருச்சபையின் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம்
Tel.ph: 021-2222571, 7514 Fax: 021-2228050 Email: hudec@sltnet.lk Website: ww.hudecjaffna.org

# சந்திப்புக்கள் கலந்துரையாடல் மூலம் தீர்வு காணமுயல்வோம்

## காலி மறைமாவட்ட ஆயரான ஹரல்ட் அன்ரனி பெரேரா தெரிவித்தார்



வடமராட்சி, திக்கம், இன்பசிட்டி, சப்பர் மடம், ஆகிய இடங்களில் கரித்தாஸ் - கியூ டெக் நிறுவனத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட 130 பயனாளிகளுக்கு வீடுகையளிக்கும் வைபவம் இயக்குனர் அருட்பணி. கி. போ. ஜெயக்குமார் தலைமையில் சக்கோட்டையில் நடைபெற்றபோது யாழ் ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கையளிப்பு அவர்கள் வீட்டினைத்திறந்து வைப்பதையும், வீட்டுக்கான திறப்பினை யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கையளிப்பதையும், இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் உரையாற்றும் போது "அன்பையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்தவே நான் யாழ்ப்பாணம் வந்தேன். தெற்கில் நான் அதிகாரிகளை சந்திக்கும்போது யாழ்ப்பாணத்தில் நான் அவதானித்த பிரச்சினைகள் தொடர்பாக விளக்கிக் கூறுவேன். இவ்வாறான சந்திப்புக்கள் கலந்துரையாடல்கள் மூலம் இங்கு காணப்படும் அனைத்து பிரச்சினைகளும் தீர்வு காணமுடியாவிட்டாலும், சில பிரச்சனைகளுக்குக் கூட தீர்வு காண முடியும் என நினைக்கிறேன்" என அகில இலங்கை கத்தோலிக்க நீதி சமாதான ஆணைக்குழுத் தலைவரும் காலி மறைமாவட்ட ஆயருமான ஹரல்ட் அன்ரனி பெரேரா தெரிவித்தார்.

## பயிற்சி வகுப்பும் விவசாய உபகரணங்கள் வழங்கலும்



கரித்தாஸ் –கியூடெக் சுனாமி வாழ்வாதார திட்ட பிரிவினரால் 70 பயனாளிகட்கு அல்லை யில் சொட்டு நீர்பாசன முறையை பயன்படுத்தி விவசாயம் செய்தல் தொடர்பான பயிற்சி வகுப்பு விவசாயத் திணைக்களத்தில் நடைபெற்றது. இதேவேளை பயனாளிகட்கு ரூபாய் 17 000 ஆயிரம் பெறுமதியான சொட்டு நீர்பாசன உபகரணங்களும் நிறுவனத்தினால் இலவசமாக வழங்கப்பட்டது.

## தேசிய சமாதான நிகழ்ச்சித்திட்ட நிகழ்வு



கரித்தாஸ் – கியூடெக் தேசிய சமாதான நிகழ்ச்சித் திட்ட பிரிவினரால் இளவாலை, மானிப்பாய், யாழ்ப்பாணம், தென்மராட்சி ஆகிய பிராந்தியங்களில் உள்ள 40 இளையோர்களுக்கு "பத்திரிகைத்துறையும் நாமும்" என்ற கருப்பொருளில் 28.02.2009 அன்று மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் கருத்தரங்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் என். விஜயசுந்தரம் அவர்கள் கருத்துக் கூறுகையில் "ஆளுமை வளர்ச்சிக்கும், சமூக மேம்பாட்டிற்கும் பத்திரிகைத்துறையில் இளையோர்கள் தேடல் உள்ளவர்களாகவும், ஆர்வமுள்ளவர்களாகவும் திகழவேண்டும் எனவும் கூறினார். மேலும் இந்நிகழ்வில் ஆசிரியர் டெ.அமிர்டன் அவர்களும் வளவாளராகக் கலந்து கொண்டார்.

## ஐ.நா.உணவு விவசாய நிறுவனத்தின் இலங்கைக்கான இணைப்பாளர் யாழ் விஜயம்



ஐ.நா.உணவு விவசாய நிறுவனத்தின் அனுசரணையுடன் கரித்தாஸ் – கியூடெக் நிறுவனத்தினால் திருநெல்வேலி மற்றும் மல்லாகத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட விவசாய பயிர்ச்செய்கையின் வெற்றியான ஆய்வு அண்மையில் ஐ.நா. உணவு விவசாய நிறுவனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான இணைப்பாளர். பற்றிக் சி இவானால் மேற்கொள்ளப்பட்டது. இதில் ஐ.நா. உணவு விவசாய நிறுவனத்தின் மாவட்ட அதிகாரி திரு. சிவானந்தன் மற்றும் கரித்தாஸ் - கியூடெக் நிறுவன திட்ட இணைப்பாளர் திரு. அரிதன் மற்றும் நிறுவன உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## நிவாரணப்பணிகள்

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ் மாவட்டத்தில் உள்ள கோப்பாய் கொடிகாமம் மிருசுவில் ஆகிய இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்களுக்கான மதிய உணவுக்கான உலர் உணவு பொருட்கள் எமது நிறுவனத்தால் நாளாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது.

**சமுர்த்தி பயனாளிகளுக்கான உலர் உணவு விநியோகம்**

| இல | பிரதேசெயலர் பிரிவு | குடும்பங்கள் |
|---|---|---|
| 1 | மருதங்கேணி (வடமராட்சிகிழக்கு) | 530 |

**பாடசாலை மாணவர்களுக்கான பாதணிகள் விநியோகம்**

| இல | பாடசாலை | மாணவர் எண் |
|---|---|---|
| 1 | கோப்பாய் இடைத்தங்கல் முகாமில் உள்ள மாணவர்கள் | 84 |
| 2 | யா.கைதடி நாவற்குழி அ.த.க | 159 |
| 3 | யா.விக்னேஸ்வரா கல்லூரி | 40 |
| 4 | மட்டுவில்பருத்தி அ.த.க வித்தியாலயம் | 158 |

**இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான குடியிருப்புக்கள்**

| இடம் | வகை | வீடுகள் |
|---|---|---|
| 1. மிருசுவில (வழங்கப்பட்டுள்ளது) | புதியது | [illegible] |
| 2. வரணி (வழங்கப்பட்டுள்ளது) | புதியது | 12 |
| 3. கரவெட்டி முடக்காடு | விரைவில் வழங்கப்பட உள்ளது | [illegible] |

**மருத்துவ உதவி**

| இல | வகை | அங்கத்தவர்கள் |
|---|---|---|
| 1 | கண் சத்திர சிகிச்சைக்கான லென்ஸ் (Lence) | 08 |
| 2 | நோயாளருக்கான போக்குவரத்துக்கான உதவி | 04 |
| 3 | மூன்று சிறு சத்திரசிகிச்சை | 01 |

"துண்டுபட்ட தனிமனிதன் அல்ல ஒன்றுபட்ட மனிதகுலம் முன்னேற வேண்டும்" (பாப்பிறை நம்பிக்கையுள்ள)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பம் ஒரு கதம்பம்

## திருமணமானவர்கள் கட்டாயம் வாசிக்க வேண்டிய விடயங்கள்

### பிள்ளைகள் மட்டில் பெற்றோரின் கடமைகள்

( அங்கம் 09 )

எஸ். ஜே. யோகராசா, சிரேஷ்ட விரிவுரையாளர்,
(உளநல ஆலோசகர்), களனிப்பல்கலைக்கழகம்

**பெற்றோர்களே ! எமது பிள்ளைகளைப் பாதுகாப்போம்.**

பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை எந்தப் பெற்றோரும் விரும்பமாட்டார்கள். இருப்பினும் எம்மத்தியில் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது என்பது கசப்பான உண்மையாகும். பிள்ளைகளை பாதுகாக்க ஒவ்வொரு பெற்றோரும் எடுக்கவேண்டிய மூன்று முக்கிய நடவடிக்கைகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

1 பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளுக்கு முக்கிய பாதுகாப்பு அரணாக இருங்கள்.

2 இந்தப்பிரச்சனையைப் புரிந்து கொள்ள உதவும் சில அடிப்படைத் தகவல்களை அவர்களுக்குத் தெரிவியுங்கள்.

3 தற்காத்துக்கொள்ளத் துணை புரியும் சில முக்கியமான விடயங்களைக் கற்றுக்கொடுங்கள்.

பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்கும் முக்கிய பொறுப்பு பெற்றோருக்குரிய உள்ளது. இதைப்பற்றி பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதற்குப் பெற்றோராகிய உங்களுக்கு இதைப் பற்றிய அறிவு உண்டா? எப்படிப் பட்ட ஆட்கள் இதில் ஈடுபடுகிறார்கள்? அவர்கள் என்ன முறைகளைக் கையாளுகிறார்கள் என்பதை நீங்கள் தெரிந்திருக்கவேண்டும். முன்பின் தெரியாதவர்களால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைவிட, நன்கு பழக்கமானவர்களால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதே அதிகம். தாம் மலைபோல் நம்பிய அறிந்தவர்களாலேயே 90 சதவீதத்தினர் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர்.

அன்பான அயலவர்கள், ஆசிரியர், உடல்நல பராமரிப்பாளர் அல்லது சொந்தக்காரர் என யாரோ ஒருவர் காமவெறியோடு உங்கள் பிள்ளைகள் மீது குறிவைப்பதை நீங்கள் நினைத்துக்கூடப் பார்க்கமாட்டீர்கள். உண்மையில் பெரும்பாலானோர் அப்படி மோசமானவர்கள் அல்லர். அதனால் உங்களைச் சுற்றியிருப்பவர்கள் எல்லோரையும் சந்தேகக் கண்ணோடு பார்க்கத் தேவையில்லை.

இருப்பினும் பிள்ளையைத் துஷ்பிரயோகம் செய்பவர்கள் என்னென்ன வழிமுறைகளைக் கையாளுகிறார்கள் என்பதைப் பெற்றோர்களாகிய நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.

' காமுகன் ஒருவன், தான் குறிவைக்கும் நபரை வழிக்குக் கொண்டுவர பெரும்பாலும் பலவந்தத்தைக் கையாளுவதில்லை. மாறாக, படிப்படியாகப் பிள்ளைகளை தன் வலையில் சிக்கவைக்கவே அவர் விரும்புவார். யாருக்கு வலைவீசுவது என்று முதலில் அவர் தீர்மானிக்கிறார். பெரும்பாலும், பார்ப்பதற்கு அப்பாவியாகத் தோன்றுகிற, தன்னை நம்புகிற பிள்ளையையே முதலில் தேர்ந்தெடுக்கிறார். பிறகு அப்பிள்ளைக்கு விசேசமான அக்கறையை, கவனிப்பைக் காட்டுவார். பிள்ளையின் பெற்றோருடைய நம்பிக்கையைச் சம்பாதிக்கவும் முயற்சிசெய்யலாம்.

பின்னர் அப்பிள்ளையைத் தயார்செய்யத் தொடங்குவார். அந்தப் பிள்ளையைத் தொடுவதை அவர் படிப்படியாகக் காட்டுவார். தொட்டுக் கொஞ்சுவது, விளையாட்டு குஸ்தி போடுவது, கிச்சுக்கிச்சு மூட்டுவது போன்றவற்றைச் செய்வார். பார்ப்போருக்கு அந்தப்பிள்ளையுடன் கள்ளம் கபடமின்றி விளையாடுவது போல் தெரியும். பல பரிசுப் பொருட்களையும் வழங்கித்தருவார். தான் கொடுக்கும் பரிசுப் பொருட்களைப் பற்றியோ, பிற்பாடு செல்லவிருக்கிற சுற்றுலாவைப் பற்றியோ பெற்றோரிடம் சொல்லவேண்டாமென்று அப்பிள்ளையிடம் சொல்லலாம். பெற்றோரும் இவரை முழுக்கமுழுக்க நம்ப ஆரம்பித்ததும் அந்தப்பிள்ளையைத் தனக்கு இரையாக்கிக் கொள்ளத் தயாராகிறார்.

துதைபும் பலவந்தமாக அல்ல, தந்திரமாகச் செய்யலாம். பாலுறவை பற்றித் தெரிந்து கொள்ள அந்தப் பிள்ளைக்கு இயல்பாய் இருக்கும். ஆர்வத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, ஒரு ஆசிரியரைப் போலிருந்து அதைக் கற்றுக் கொடுப்பதாகக் கூறலாம். அல்லது யாருக்கும் தெரியாமல் ஒரு விசேட விளையாட்டை இருவரும் விளையாடலாமென்று அவர் அழைக்கலாம். அந்தப் பிள்ளைக்கு ஆபாசப்படங்களைக் காட்டி, அதெல்லாம் சாதாரண விசயம் தான், என்ற எண்ணத்தை பிள்ளையின் மனதில் விதைக்க முயற்சி செய்யலாம்.

அந்தப்பிள்ளை தனக்கு இரையாகிவிட்டால், அதைப்பற்றி வெளியில் சொல்லிவிடக்கூடாதே என்பது தான் அந்த காமுகனின் அடுத்த பிரச்சனை. அந்தப்பிள்ளையின் வாயை மூட அவன் மிரட்டலாம். பயமுறுத்தலாம் பழிசுமத்தலாம் அல்லது வேறு முறைகளைப் பயன்படுத்தலாம் உதாரணமாக 'இது உனது தப்பு, அப்படிச் செய்யவேண்டாமென நீ சொல்லவில்லையே' என்று கூறலாம். இதை உன் அப்பா அம்மாவிடம் சொன்னால் பொலிசைக் கூப்பிட்டு அவர்கள் என்னை நிரந்தரமாக ஜெயிலில் தள்ளிவிடுவார்கள்' என்று சொல்லலாம். அல்லது' இது நமக்கு மட்டும்தான் தெரியும். வெளியில் சொன்னால் யாரும் உன்னை நம்பமாட்டார்கள். உன் அப்பா அம்மாவிற்கு தெரிந்தால், அவர்களை நான் தொலைத்துக்கட்டிவிடுவேன்.' என்று பயமுறுத்தலாம். பெற்றோராகிய நீங்கள் அரண்போலிருந்து உங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்க இவ்விடயங்களை நீங்கள் அறிவது முக்கியம். நாம் எல்லோரையும் வீணாகச் சந்தேகிக்கக் கூடாது. ஆனால் கவனமாக இருப்பது நன்று அல்லவா?

'கபடமற்றவன் எவ்வார்த்தையும் நம்புகின்றான். விவேகமுள்ளவனோ தன் அடிச்சுவடுகளைக் கவனிக்கின்றான்' (பழமொழி/ நீதிமொழி 14/15)

நினைத்துப்பார்க்க முடியாத அளவிற்கு ஒருவர் வலிய வந்து உதவி செய்தால் அதன் பின்னால் ஏதோ உள்நோக்கம் இருக்கலாம் என்பதை மனதில் வையுங்கள். உங்கள் பிள்ளையோடு தனிமையில் நேரத்தை செலவிட விரும்பும் எவர்மீதும் ஒரு கண்வையுங்கள்.

வீட்டில் உங்கள் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஆசிரியர் வரும் போது வீட்டில் ஒருவராவது இருப்பது நன்று.

உங்களுடைய பிள்ளைகள் என்னென்ன செய்கிறார்கள்? அவர்களுடைய நண்பர்கள் யார்? என எல்லாவற்றிலும் மிகுந்த கவனம் செலுத்துங்கள்.

உங்கள் பிள்ளையை அரண் போலிருந்து பாதுகாக்க மற்றொரு வழி, அவர்கள் பேசும் போது கவனமாகக் கேட்பதாகும். துஷ்பிரயோகம் செய்யப்பட்டதைப் பெரும்பாலான பிள்ளைகள் தங்கள் மனதிற்குள்ளேயே பூட்டிவைத்துக்கொள்கிறார்கள். அவமானத்தால் கூனிக்குறுகிப் போவதும், வெளியில் சொன்னால் என்னவாகுமோவெனப் பயப்படுவதுமே அதற்கு காரணம். ஆகவே, துளி அறிகுறி தென்பட்டாலகூட அதை உன்னிப்பாகக் கவனியுங்கள். (இப்படிப்பட்ட செயல் ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் பொருந்தும்.) உங்கள் பிள்ளை சொன்ன ஏதோவொரு விடயம் உங்கள் மனதை கஷ்டப்படுத்தினால், நிதானமாகக் கேள்வி கேட்டு, பிள்ளையை மனந் திறந்து பேசவையுங்கள்.

"ஞானம் உன் மனதிற்குள் நுழைந்து, தெய்வ போதகத்தை உன் ஆன்மா விரும்பினால், அறிவாரை உன்னை ஆதரிக்கும், விவேகம் உன்னைக் காக்கும் அதனால், தீய வழியினின்றும், அக்கிரமங்களைப் பேசுகிற மனிதர்களினின்றும் நீ காப்பாற்றப்படுவாய்" (பழமொழி/நீதிமொழி 2/10-12)

(தொடரும்....)

---

# கவிதைச் சரம்

## வன்னி மக்களின் அவலங்கள்

அருட்கரம் அணைக்கும்
அடைக்கல அன்னையே!
இருட்கரம் எமையே!
அகற்றிட செய்பவே!
திருக்கரம் கொண்டுமே
நீதயா போகவே
திருமகன் இயேசுவை
எமக்காய் வேண்டுமே!

உணவின்றி வாடுகிறோம்
உணர்வுறத் துடிக்கின்றோம்
உதவுவோர் யாரம்மா?
உன்னையே அல்லாமல்?
உதைதன் பாங்கையால்
உடுக்கின்றோ உதவுவோர்
உணர்த்திடுவாய் அம்மா!
உன்மைந்தன் அறிந்திட...

தந்தையை இழந்தோம்
தலைவனை இழந்தோம்
அன்னையை இழந்தோம்
அண்ணனை இழந்தோம்
தங்கையை இழந்தோம்
தம்பியை இழந்தோம்
தாரத்தை இழந்தோம்
தலைமையை அறிந்தோம்

சுற்றத்தை இழந்தோம்
சொத்தையே இழந்தோம்
செத்தவர் தம்மையே
சொத்தாய் அடைந்தோம்
புத்திரரை இழந்தோம்
புத்தியையும் இழந்தோம்
புத்திரனாய் வாழ்ந்திட
பொறுதியும் இழந்தோம்
போரிலா கலைந்திட
கோமகன் இயேசுவின்
பேரருள் நிரந்தரம்
பெற்றிட செய்பவே!
துயர் அகல் மக்களாய்த்
தரையதில் வாழ்ந்திட
இறைவா வழங்குமே!
பேரருட் தாயரே!

விண்ணகம் சென்றிட
எம்மவர் தமையே
எண்ணில்லாப் பேரின்பம்
புண்ணிய மனை தந்து
உன்மகன் இயேசுவின்
அன்பினில் இணைத்துமே
அன்னவன் தந்தை
தூயாவியோடு நிரப்புமே

(சு.அடைக்கலம்),
தமிழமுதன்

## வேண்டுதல்

மழையே - எனக்கு
ஒருவார அவகாசம் கொடு!
கூரையின் ஓட்டைகளை
அடைத்துக் கொள்வதற்கு!

## நாகரீகம்!

நிர்வாணமாய் நின்று
வரைந்து கொண்டிருக்கிறேன்!
ஆடை அணிந்ததான
ஓவியங்களை......

## யுகம்

சீதனம் கேட்பதற்கு பதிலாக
நிர்ணயிக்கப்பட்ட விலையில்
கடைத் தெருக்களில்
விற்பனை செய்யலாமே....?
மணமகன்களை....

## முன்னேற்றம்!

நிலவொளியில் இருந்து
கேகரித்துக் கொண்டிருக்கிறேன்!
கணனி பற்றியதான
தகவல்களை....?....

## வறுமை

வரப்போகும்
சூறாவளியை முன்னிட்டு
வழக்கப்படுகிறது...
நிவாரண
விண்ணப்பப்படிவங்கள்!

வி. மூர்வன்
நெடுந்தீவு - 13

## அவலத்தின் ஓலங்கள்

துப்பாக்கி முனையில்
எங்கள் வாழ்வு
கூறுபோடப்படுகிறது
அடுத்த நொடிக்கே
ஆதாரமற்ற எங்கள் பொழுதுகள்
உதிரங்களில் தோய்ந்தே உதயமாகிறது.

எனது பெயரை எழுத நினைக்க
எனக்கு கைகள் இல்லை
எழுந்து ஓட நினைக்கின்றேன்
கால்களையும் காணவில்லை
மரண பயத்தை மடியில் கட்டியபடி
பாதைகளில் எங்கள் பயணங்கள்.

கல்லறை நாயகன் நடந்த
கரடுமுரடான பாதை
நாம் இன்று நடப்பது
உயிரற்ற உடல்கள் நிரம்பிய பாதை
குப்பைகள் போல
தெருக்களில் உடல்கள்
வீசப்படும் அவலம்
எங்கள் இனத்துடன் முடியட்டும்.

M. ஜெயமாலா,
நெடுந்தீவு

## கண்ணீர் தரும்பும் வேளையில்...

காரிருள் சூழும் எங்கள் பொழுதில்
இறைவா எம் அருகிருப்பாய்
கொடும் துயரங்கள் எம்மைச் சூழ்கையில்
தாயாய் நீ அரவணைப்பாய்

முடிவு தெரியா போரின் நடுவே
முகங்கள் இழந்து போகின்றோம்
கால்கள் ஓயா பயணமொன்றில்
பாதை மாறிச் செல்கின்றோம்
அன்னி அணைத்து காத்து எம்மை
உந்தன் நிழலில் வாழவிடு

உண்டும் உடுத்தும் மகிழ்ந்து களித்தும்
என்றும் போல வாழ்ந்திருந்தோம்
சீரிப்பாயும் எதிரிகளை வதைக்க
வாழ்வின் வழி நின்றோம்
என்ன செய்வோம் ஏது செய்வோம்
இறைவா எம்நிலை அறிந்து
தேற்றிவோய் காத்திடுவாய்.

H.B. ஜோய், கொய்யாத்தோட்டம்

## இயேசுவின் வாழ்வில் எம்வாழ்வு

அன்பு எனும் மூன்றெழுத்தை
ஆழமாக உணர வைக்க
இறைமகன் இயேசு இவ்வுலகில் உதித்தார்
ஈராயிரம் ஆண்டு முன்பே
உலகிற்கு ஒளியாக வந்த இயேசு
ஊர் ஊராய் எடுத்துரைத்தார் இறையரசை
எடுத்துத்தான் இயம்பினார்
ஏடு அல்ல அவர் தம் வாழ்வாம்
ஐயம் ஏதுமின்றி
ஒன்று பட்ட வாழ்வு வாழ
ஓய்ந்திருக்காமல் உழைத்து நின்றார்
ஔவியத்தையும் காத்து வந்தார்

கடந்த கால கிறிஸ்து அனுபவம்
காலத்திற்கேற்ப நிகழ வேண்டும்
கிறிஸ்து தந்த செய்திகளை
கீழ்ப்படிந்து ஏற்க வேண்டும்
குணம் நிறைந்த எம் வாழ்வாம்
கூடி வாழ்க்கை வாழ வேண்டும்
கெடுதிகளைத் தவிர்த்து விட்டு
கேட்போரைத் தேட வேண்டும்
கை கொடுத்து உதவ வேண்டும்
கொள்கைகளைக் கடைப்பிடித்து
கோன் கிறிஸ்துவின் வழி நடப்போம்
கௌரவத்தையும் பேணி வாழ்வோம்.

மனமாற்றத்தின் காலமிது மனமாற்றம் பெற்றிடுவோம்
மனம்மகிழ மனிதர்களாவோம்
மிதமிஞ்சிய பேச்சுக்களை அகற்றிடுவோம்
மீண்டும் ஒரு புதுவாழ்வு வாழ்ந்திடுவோம்
முன்னின்று இறையாட்சி பகர்ந்திடுவோம்
மூர்க்கத் தனத்தை நீக்கிடுவோம்
மென்மை மனம் படைத்திடுவோம்
மேன்மக்கள் வழி நடந்திடுவோம்
மைந்தர்களுடன் கூடி மகிழ்ந்திடுவோம்
மொழி குல பேதம் அகற்றிடுவோம்
மோகம் என்பதனை வெறுத்திடுவோம்
மௌனத்தில் கூடவே இருந்திடுவோம்.

திருமதி. செல்வராணி ஞானரட்ணம், கன்னாகம்

## குலைகின்ற மனங்களை நிலை நிறுத்தும் இறைவா

வன்னிமகன் வழங்கொழிக்கும்
வளமுள்ள நாட்டை
இன்னல்மிக கொடுக்குதே
செந்தகத்தில் உருவான சாட்டை
வான் பருந்தின் எச்சத்தினால்
வீதிகள் நிலமெங்கும் ஓட்டை
இது நீதியா நியதியா
உலகின் பதில் என்னவாகும்.

வீழ்ந்து நாடிழந்து
வீதி எங்கும் அலைகின்றான்
உறவெல்லாம் இழந்ததினால்
மனிதன் மனம் குலைகின்றான்
வீதி வழியில் போனவனும்
விலாசமின்றி தொலைகின்றான்
நிரந்தர நிலைப்பாடு இதுதானோ
நிம்மதி தாராதோ எம் இறைவா.

வேண்டாத நிலைப்பாட்டில்
வேதனை நல் மனங்கள்
சமாதான உறவு வேண்டி
ஏங்கி நகருது தினங்கள்
கண்ணீரும் கவலைகளும்
மறைந்து மகிழ்வோடு
இன்றைக்கே எம் இறைவா
கருணை ஒளியாய் வாரும்.

சு. பவன் சேவியர், அல்வைப்பிட்டி - 3

## இரங்க மாட்டீரோ இறைவா

இதயத்தின் வேதனைகளை
வார்த்தைகளில் வடிக்க
எம்மால் முடியவில்லை
உயிரிருந்தும்
நடைபிணமாய்
உலாவரும் எம்
இனத்தவரின் வாழ்வு
பரிவென்றும்
பச்சிளம் பாலகர்கள்
பரிதவித்து அழும்
கோரக்காட்சிகள்
இறந்த உறவுகளை
புதைப்பதற்கு
அடக்கம் செய்ய
புதைகுழிகள் இல்லாத
புதிய யுகம்
இவையனைத்தும்
போதாதென்று
உயிர்களை
பறித்துச் செல்லும்
குண்டு மழைகள்
எவ்வளவு தான்
அனுபவித்து
தாங்கிட முடியும்
எம் உறவுகளால்
விம்மி அழுகுரல்
விழிகள் வீங்கி
மறுமொழியும் சு. மேரி அருள்மதி
எம் இனத்தின் மல்வம் , உடுவில்
விடுதலைக்காய்
நீர் இரங்கமாட்டீரோ
இறைவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ம் வத்திக்கான் சங்கமும்... (2ம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து இறைமக்களும் திருச்சபையின் திருத்தூதுப்பணியில் பங்கேற்க திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் என்னும் அருட்சாதனங்கள் வழியாக அழைப்பு பெறுகின்றனர். அருட்பணியாளர், கன்னியர், துறவியர் பணியாக ஒருகாலத்தில் கருதப்பட்ட அப்பணி இன்று அனைவரின் பணியாக உள்ளது.

இத்திருத்தூதுப்பணி வெறும் மறையைச்சார்ந்தது மட்டுமல்ல அது உலகையும் சார்ந்தது. மனித மேம்பாட்டின் தொண்டையும் சார்ந்தது. சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டுத்தளங்களை உள்ளடக்கியது. இம்மாபெரும்பணியை இறைமக்கள் தாம் வாழும் சூழ்நிலையில், தமக்குரிய முறையில் செய்யக் கடமைப்பட்டுள்ளனர்.

புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் திருமுகத்தில் 'நற்செய்தி அறிவிக்காவிடில் ஐயோ எனக்கு கேடு' (9:17) எனக் கூறியிருக்கிறார். நற்செய்தி அறிவிப்பு என்பது எல்லா மக்களையும் கிறிஸ்தவர்கள் ஆக்க முயலும் ஒரு திட்டம் அல்ல என்பதை இன்று நாம் புரிந்துகொள்ள வேண்டும். மாறாக அது கிறிஸ்துவாக வாழ முயற்சி செய்வதும், கிறிஸ்துவாக வாழ முயற்சி செய் என அறை கூவல் விடுப்பதுமாகும். மேலும் அது இறைவனின் அன்பை பிறருக்கு வழங்கும் ஒரு நிகழ்வாகவும், மனிதத்தை பிறரில் வளர்க்கும் ஒரு செயலாகவும் அமைகிறது.

இன்னும் சிறப்பாக எமது சூழலில் உறவுகளை, உடமைகளை இழந்து உரிமைகள் பறிக்கப்பட்டு சொந்த மண்ணிலேயே வாழ வழியற்று நிற்கும் எம் உடன்பிறப்புகளுக்கு புதுவாழ்வு கொடுப்பதாக அமைய வேண்டும்.

பொதுநிலையினரின் புனிதப்படுத்தும் பணிகள் தொடர்பாக திருச்சபையின் புதிய சட்டம் பல புரட்சிகரமான கருத்துக்களை முன்வைத்திருக்கின்றது. உதாரணமாக குருக்கள் அல்லது திருத்தொண்டர்கள் அல்லாத சூழ்நிலையில் பொது நிலையினரை திருமுழுக்கு வழங்க ஆயர் நியமிக்கலாம். குறிப்பிட்ட சூழ்நிலையில் பொதுநிலையினர் திவ்விய நற்கருணையை வழங்கலாம். அவசியம் ஏற்படும் போது கடின நோய்வாய்ப்பட்டவர்களுக்கு இறுதி வழியுணவாகத் திவ்விய நற்கருணையை வழங்கலாம்.

ஆண் - பெண் ஆகிய இருபால் பொதுநிலையினர் வாசகர் பணி, திருப்பீடப் பணி, பாடகர் பணி, விளக்கவுரையாளர் பணி போன்ற பணிகளில் ஈடுபடலாம். அவசியமான சூழ்நிலையில் ஆசிர்வாதம் கொடுக்காமல் திவ்விய நற்கருணையை எழுந்தேற்றம் செய்ய பொதுநிலையினருக்கு புதிய சட்டம் இடம் கொடுத்திருக்கின்றது. மேலும் திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், நற்கருணை, திருமணம் போன்ற அருட்சாதனங்களை வழங்குவதற்கு மக்களை தயாரிக்க பொது நிலையினருக்கு கடமையுண்டு எனவும் புதியசட்டம் எடுத்துரைத்துள்ளது. இந்தவகையில் வழங்கப்பட்ட பல புதிய சலுகைகளையும் கடமைகளையும் பயன்படுத்தி திருச்சபையின் வளர்ச்சிக்காக உழைத்து வருகின்ற போதிலும் பொது நிலையினரின் பங்களிப்பு குறைவானது எனவே கூறப்படுகிறது. குறிப்பாக எமது சூழலில் பொது நிலையினரின் பணிகள் குறைவாகவே காணப்படுகின்றன. பாரம்பரியத்தை பேணுதல் என்னும் பெயரில் புதியவற்றை உள்வாங்க முயற்சிக்காமையும், 21ம் நூற்றாண்டின் வேகமான வளர்ச்சிக்கும், மாற்றங்களுக்கும் ஏற்றவகையில் செயற்பட மறுப்பதும் பொது நிலையினரின் பணிகளில், மாற்றங்கள் வராமைக்கு காரணமாகும். உதாரணமாக புதிய சட்டத்தில் இடம் அளிக்கப்பட்ட நற்கருணைப் பணியாளர்களைக் குறிப்பிடலாம். எனவே பொதுநிலையினர் தமக்கு தரப்பட்ட பணிகளை நிறைவேற்ற திறந்த மனதோடு முன்வரவேண்டும்.

## நெருக்கமான வாயில் வழியாக... (2ம் பக்கத் தொடர்ச்சி)

அழிவுப்பாதைகள். ஆனால் கல்லும் முள்ளும், பள்ளமும் மேடும், திருடரும் தீங்கும் சூழ்ந்த பாதை தான் மீட்பின் பாதை. இதுதான் இயேசுவின் சிலுவைப் பாதை. இதில் நாம் எதைத் தெரிவு செய்யப் போகின்றோம்...?

இயேசுவின் சிலுவைப் பாதையின் ஊடாக நாம் பயணிக்க முடிவெடுப்போமானால் அது எம்மை மீட்பின் பாதைக்கு அழைத்துச் செல்லும். ஆனால் அது எளிதான காரியமல்ல. "உனக்குள்ள யாவற்றையும் விற்று ஏழைகளுக்கு கொடு" (மத் 19:21) என்பது எளிதானதன்று. "என்னைப் பின் செல்பவன் தன் சிலுவையை சுமந்து கொண்டு என்னைப் பின் செல்லட்டும்" (மாற்கு 8:34) என்ற கூற்று மிகவும் கடினமானது. "உன் வலக்கை உனக்கு இடறலாக இருந்தால் அதை வெட்டி எறிந்து விடு" (மத் 5:30) என்பது இலகுவான காரியமல்ல. மாறாக கடினமானது, சவால்கள் நிறைந்தது, சாதாரண மனித புத்தியினால் புரிய முடியாதது. ஒரு கிறிஸ்தவனின் வாழ்வு எளிதான பாதை வழி செல்லும் வாழ்க்கையல்ல என்று நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். இன்று எம்மில் வலுக்கட்டாயமாக சுமத்தப்பட்டிருக்கும் துன்பச் சுமைகள் எல்லாம் நாம் சுமக்கும் இயேசுவின் சிலுவைகள். தன் பிள்ளைகளை பறிகொடுத்து கலங்கி கதறியழும் ஒவ்வொரு தாய்மாரும் அன்னை மரியின் வியாகுலங்களை தங்கள் உள்ளத்தில் சுமக்கும் உத்தம அன்னையர்கள். உடல் அவயவங்களை இழந்து, வாழ்வில் துன்புறுபவர்களும், அநியாயமாக கொல்லப்படும் பச்சிளம் பாலகர்களும் விண்ணக இராட்சியத்தில் வாழ்வைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதில் எதுவித ஐயமுமில்லை. அவ்வாறு இயேசுவின் வழியில் பயணிக்கும் மனிதன் நிலை வாழ்வைப் பெறுவது உறுதி.

## சிரிப்பு வந்தா சிரியுங்க!

மறை ஆசிரியை : பரிசுத்த வாரத்தின் முக்கிய நிகழ்வு எது என்று யாராவது சொல்ல முடியுமா?
மாணவன்: நான் சொல்லுறன் ரீச்சர்
மறை ஆசிரியை : என்ன சொல்லு?
மாணவன் : ஆசுந்தி
மறை ஆசிரியை : ???

★★★

மகன் : (நற்கருணை விருந்தின்போது) அம்மா! எனக்கும் நற்கருணை பெற்றுத் தாங்கோ!
அம்மா : பாதர் பெரிய ஆட்களுக்கு மட்டும் அளவா எண்ணித்தான் நற்கருணை வைத்திருக்கிறார். சின்னப் பிள்ளைகளுக்கு குடுக்கமாட்டார்.
மகன் : அப்பா பின்னாலை நித்திரையாக் கிடக்கிறார். அப்பாவின்ர நற்கருணை மிச்சமாய் இருக்கும்தானே. அதை எனக்கு வாங்கித் தாங்கோவன்.
அம்மா : ???

★★★

ரீச்சர் : வேதாகமத்தில் எத்தனை புத்தகங்கள் உண்டு?
மாணவன் : மூன்று ரீச்சர். என்னட்டை ஒன்று, அக்காவிட்ட ஒன்று, அம்மாவிட்ட ஒன்று.

★★★

ஒருவர் : பாதர். யோனாவைத் திமிங்கலம் விழுங்க அவர் மூன்று நாள் அதனுடைய வயிற்றில் இருந்தபோது அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டிருக்காதா?
பாதர் : நான் மோட்சத்துக்குப் போகும்போது அவரைச் சந்தித்து இதுபற்றிக் கேட்கிறேன்.
ஒருவர் : அவர் நரகத்திலிருந்தால் எப்படிக் கேட்பீர்கள்?
பாதர் : அங்கிருந்தால் நீர் கேட்கலாம்தானே!!!

★★★

ஒருவர் : தனது மனைவியைத் தவிர வேறு எந்தப் பெண்ணையுமே பார்க்காத, வேறு எந்தப்பெண்ணைப் பற்றியும் சிந்திக்காத மனிதன் இருப்பானா?
மற்றவர்: ஆம். ஒரே ஒருவர் மட்டும் இருக்கிறார்.
ஒருவர்: யார் அவர்?
மற்றவர்: ஆதாம்.

★★★

## தூய பவுலின் திருமுகங்களுக்கோர் பின்னணி

### உரோமையர் திருமுகம்

S. அன்ரனிப்பிள்ளை, மறை ஆசிரியர்

சென்றவாரத் தொடர்ச்சி...

இது எழுதப்பட்ட காலத்தை நோக்குமிடத்து மூன்றாம் நற்செய்திப்பயணத்தின் இறுதிக்கட்டத்தில் (கி.பி 57-58ல்) இதனை எழுதியிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. ஏனெனில் அவர் தம் மூன்றாம் பயணத்தின் போதுதான், எருசலேமின் இறைமக்களிடையே உள்ள ஏழைகளுக்காக நிதிதிரட்டுகின்றார். (1கொரி 16:1-4) பின் தான் திரட்டிய நிதியை யெருசலேமுக்கு எடுத்துச்செல்லப் போவதாகக் குறிப்பிடுகின்றார். (15:26-28) எனவேதான் யெருசலேமுக்குச் சென்று இப்பொருளுதவியை உரியவரிடம் கொடுத்துவிட்டு பின் உரோமைக்குச் செல்லவேண்டுமென்ற எண்ணமிருந்ததால் (தி.ப 19:21) இவை பற்றியெல்லாம் இம்மடலில் குறிப்பிடுகின்றார். எனவே இக்காலத்தில் தான் (கி.பி 57-58) எழுதப்பட்டிருக்க வேண்டும். கெங்கிரேயாவில் இருந்த திருச்சபையில் பணிபுரிந்த (16:1) 'பெபியர்' என்ற அம்மையாரை உரோமைத்திருச்சபைக்கு அறிமுகம் செய்து வைக்கின்றார் தூயபவுல். கெங்கிரேயா கொரிந்திலிருந்து ஏறக்குறைய 1 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஒருதுறைமுகப்பட்டினம். இக்குறிப்பைக் கொண்டு தூயபவுல் இத்திருமுகத்தை கெங்கிரேயாவிலிருந்துதான் எழுதியிருக்க வேண்டுமெனச் சிலர் கருதுகின்றனர். ஆனால பவுல் 16:23ல் குறிப்பிடும் அவரது நண்பர்களான காயுவும், ஏவல்தும் கொரிந்து திருச்சபையைச் சேர்ந்தவர்கள் (1கொரி1:14). இதனால் கொரிந்து நகரில் அல்லது கொரிந்துப்பகுதியில் மூன்றாம் மாதம் தங்கிப் பணியாற்றிய போது இம் மடலை எழுதினார் என்பதே பல அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளும் கருத்தாகும்.

ஏன் எழுதப்பட்டது?

"யான்பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற வாக்கிற்கமைவாக தான்பெற்ற பெருவாழ்வை பிறரும் பெற்று மகிழ வேண்டும் என்னும் பேரார்வத்துடன் பல இடங்களுக்கும் பயணம் செய்து நற்செய்தியை அறிவித்துவந்த தூய பவுல், தான் சென்று வந்த இடங்களில் குழப்பங்கள் ஏற்பட்டபோது தன தூதுவர்களை அனுப்பி அறிவுரையும், ஆறுதலும் கூறிவந்தார். சிறுசிறு பூசல்களும், பிரச்சினைகளும் எழுந்த போது திருமுகம் எழுதி அவற்றை தீர்த்து வைத்தார். ஆனால் உரோமையருக்கு மடல் அனுப்ப இத்தகைய முறையில் உடனடிப் பிரச்சனை எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை.

அதேநேரத்தில் மத்தியதரைக் கடலைச் சுற்றியுள்ள நாடுகளின் பெரும்பாலான பகுதிகளில் நற்செய்திப்பணியாற்றி முடித்துவிட்டு பவுல் மேற்கு நாடுகளிலும் (குறிப்பாக ஸ்பெயினிலும்) நற்செய்திப் பணியை தொடர விழைகிறார். அதன் உரோமைதான் முக்கியமான மையமாக அமையமுடியும் என்பதனால் உரோமை செல்வதற்கு அதிகம் ஆவல்கொண்டார். (15:22:24,28) அதற்கு முன்னேற்பாடாகத்தான் உரோமையருக்கு இம்மடலை வரைகின்றார்.

தொடரும்...

## மறைக்கல்வி நடுநிலையச் செய்தி

### பங்குகளில் திருவிவிலிய அறிவுத் தேர்வு

தேர்வு நாள் :- 2009 பங்குனி 28ம் நாள் சனிக்கிழமை
நேரம் :- காலை 9.00
இடம் :- பங்கு மறைப்பாடசாலை

தேர்வு ஐந்து பிரிவுகளுக்கும் எழுத்துப்பரீட்சையாக நடைபெறும்.

### பங்கு மறை ஆசிரியர்களுக்குத் தேர்வு

தேர்வு நாள் :- 2009 சித்திரை 18ம் நாள் சனிக்கிழமை
நேரம் :- காலை 9.00 மணி முதல் மு.ப. 11.00 மணி வரை
இடம் :- பங்கு மறைப்பாடசாலை

### இளையோர் மறைக்கல்வித் தேர்வு

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை (இளையோர் மறைக்கல்வித்தேர்வு) முன்னர் அறிவிக்கப்பட்டபடி பங்குனி மாதத்தில் நடைபெறமாட்டாது. வைகாசி மாதம் 2ம், 3ம் திகதிகளில் நடைபெறும் என தேசிய மறைக்கல்வி நடுநிலையம் அறியத்தருகின்றது.

இயக்குனர், யாழ் மறைக்கல்வி நடுநிலையம்.


5ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி.
றோஸ் மாகிரட் அன்ரனிரட்ணம்
(குஞ்சு ரீச்சர்)
மலர்வு : 16.05.1936
உதிர்வு : 01.03.2004

எம் உறவின் வேராய்
எம் அன்பின் நிறைவாய்
எம் வாழ்வின் உயிராய்
கலந்திட்ட கடவுள் அன்பால்

நித்திய வாழ்வின் நீண்ட இன்பத்தில்
உன்னத கடவுளை உற்றுப் பார்க்கையில்
உறவுகள் எமக்காய் இரந்து மன்றாடும்.

"இலவாசா"
நாக்கியம்புலம்
ஏழாலை தெல்லிப்பழை, கன்னாகம்.

Advt-13/09

பிரிவால் துயருறும்
மைத்துனர், பேரமக்கள்.

100வது பிறந்ததின நினைவு



திரு. அருளப்பு மரியாம்பிள்ளை
11.03.2009

இவ்வுலகிற்கொளி ஏந்து
இறையன்பைக் காட்டி நின்றார்.
இறைவனுக்கும் அயலவர்க்கும்
இனிய பணிக்கொடை ஈந்தனர்.
நம் வாழ்வின் பெரும் பங்கை
இறைதொண்டில் செலவிட்டார்.

பிறர் துன்பம் கண்டறிந்து
உதவி பல செய்திருந்தார்.
பணி யாவும் முடித்த அவர்
பரமனை ஏகி விட்டார்.
முடிவில்லா வாழ்வு பெற
முதல்வன் தாள் வேண்டி நிற்போம்.

மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்
அருட்தந்தை அல்பேட் யோகராசா
அருட்சகோதரி யசிந்தா தி.சி.

52 மருதடி றோட்
யாழ்ப்பாணம். Advt-17/09

நன்றிச் செபம்

புனித யூதாததேயுவே, இயேசுக்கிறிஸ்து நாதரின் நெருங்கிய உறவினரே, திக்கற்றவரின் உதவியே, ... பாதுகாவலரே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

Advt-18/09 - ஓர் அடியாள் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைப்பட திறனாய்வு

இந்திய தமிழ் சினிமாத்துறை நன்கு வளர்ந்துவிட்டது. பெரும் எண்ணிக்கையிலான திரைப்படங்களும், சின்னத்திரை தொடர்களும், குறும்படங்களும் தாராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றில் எவை தர்மானவை? பயனுள்ளவை? பார்க்கக் கூடியவை? என்ற கேள்விகள் பொறுப்புணர்வுமிக்க சினிமா ஆர்வலர்களிடமிருந்து எழுந்த வண்ணமுள்ளன. இந்த திரைப்பட திறனாய்வு பகுதியினூடாக சில திரைப்படங்கள் பற்றிய எமது திறனாய்வை தொடர்ந்து உங்கள் முன் வைக்கவுள்ளோம். உங்கள் மனப்பதிவுகளையும் எழுதியனுப்புங்கள்.

**- சமூகத் தொடர்பு ஆணையம், யாழ் மறைமாவட்டம் -**

## வில்லு

இவ்வருட ஆரம்பத்தில் வெளியிடப்பட்டு சராசரி தமிழ் சினிமா ரசிகர்களுக்கும், விஜய் விசிறிகளுக்கும் 'புரியாணி' சாப்பாடு போட்ட படம்தான் 'வில்லு.' "டாடி மம்மி வீட்டில் இல்லை. தடை போட யாரும் இல்லை" (ஆகவே) 'வில்லு' பார்ப்போமா புள்ள...' என்று குடும்பமாக பார்க்கமுடியாதபடி செய்து, விரசம் நிறை பாடல் காட்சிகளும், இரட்டை அர்த்த வசனங்களும் தாராளமாக உள்ளடங்கிய படம். ஐங்கரனின் தயாரிப்பிலும், பிரபு தேவாவின் இயக்கத்திலும், தேவிசிறி பிரசாத்தின் இசையிலும், ரவிவர்மனின் ஒளிப்பதிவிலும், விஜய் (இரட்டை வேடம்), நயன்தாரா, பிரகாஷ்ராஜ், வடிவேலு ஆகியோரின் பிரதான நடிப்பிலும் உருவான 'வில்லு' துப்பறிந்து பழிதீர்த்தலை மையக் கருத்தாகக் கொண்டுள்ளது. ஆங்காங்கே தொட்டுக்கொள்ள விஜயின் தனிநபர் சாகச் சண்டைகளும், தொடையழகிகளின் குலுக்கலும், நயன்தாராவின் குறைந்த ஆடை நடனமும், வடிவேலுவின் சிரிக்க வைக்க முயற்சிக்கும் நகைச்சுவைகளும் சராசரி ரசிகர்கள் மத்தியில் வில்லை செல்லும்படி வைத்தது எனலாம். இதனை 1998 ல் வெளிவந்த இந்தி சினிமாவின் Soldier (போர் வீரன்) படத்தின் தமிழ்வடிவம் என்றும் கூறலாம்.

நேர்மையான இந்திய இராணுவ அதிகாரியான சரவணன் (விஜய் - அப்பா வேடம்) ஊழல் நிறைந்த இராணுவ சகாக்களான துனு (பிரகாஷ்ராஜ்) மற்றும் ஷான் (தேவராஜ்) போன்றவர்களின் சூழ்ச்சியால் கொல்லப்படுகிறார். அவர் மீது தேச துரோக குற்றமும் சுமத்தப்பட்டு இறுதிக்கிரிகைகளும் நடத்தவிடாது தடுக்கிறார்கள். சரவணனின் மகன் புகழ் (விஜய் - மகன் வேடம்) சிறு பையனாக இவற்றையெல்லாம் காண்கிறான். அவன் வளர்ந்து எவ்வாறு தன்தந்தையின் எதிரிகளைப் பழிவாங்குகிறான் என்பதுவும், துனுவின் வாயாலேயே அவர்களது சூழ்ச்சிகள் பற்றி அக்கிராம மக்களுக்கு அறிக்கையிட வைத்தபின் எப்படி அவரைக் கொல்கிறான் என்பது தான் பிரதான கதை. இதற்கிடையில் அவனது எதிரியான துனுவின் மகளான ஜானவி (நயன்தாரா) அவனுக்கு அறிமுகமாவதும், காதல் வளர்வதும் கதையில் ஏற்படும் கிளர்வுத் திருப்பம். கதையில் மாடசாமி (வடிவேலு) குறுக்கிடுவதும், வழமைபோல் எல்லாரிடமும் (இம்முறை graphics மாடும் சேர்ந்து) வாங்கிக் கட்டுவதும் படத்தின் நடுவில் தொய்வை நிவர்த்திக்கும் நுட்பம்.

போக்கிரி, அழகிய தமிழ்மகன், குருவி போன்ற விஜய் பட வரிசையில் அவற்றின் (clone) அசலான நகல் என்று சொல்லக்கூடிய வகையில் 'வில்லு' அமைந்துள்ளது. இந்தியாவில் உயிரியல் குளோனிங் நடைமுறையில் உண்டா இல்லையா என்பது விவாதத்துக்குரியது. ஆனால் இந்திய சினிமாவில் ஆரம்பம் தொட்டு குளோனிங் கடைப்பிடிக்கப்படுவது கண்கூடு. குறிப்பாக சமீபத்திய விஜய் படங்கள் எல்லாமே குளோன் செய்யப் பட்டவையே. ஏனெனில் அவருக்கு சமீபத்திய எல்லாப் படங்களிலும் ஒரே மாதிரியான பாத்திர அமைப்புத்தான். எனவேதான் "கமல் தனது தசாவதாரத்தில் 10 வேடங்களை ஏற்றார். ஆனால், விஜய்க்கு 10 படங்களிலும் ஒரே வேடம்தான்" என்று விமர்சகர்கள் கிண்டல் செய்கிறாகள், **(தொடரும்)**

**அடுத்த இதழ் ஈஸ்ரர் சிறப்பிதழாக வெளிவரும்**
**உங்கள் ஆக்கங்களை உடனே அனுப்பி வையுங்கள்.**

## யாழ் மறைமாவட்டக் குருக்கள் மன்றின் தவக்காலத் தியானம்

யாழ் மறைமாவட்டக் குருக்கள் மன்றின் தவக்காலத் தியானம் கடந்த 10ம் திகதி சாட்டி திருத்தலத்தில் இடம்பெற்றது. 60க்கு மேற்பட்ட மறைமாவட்டக்குருக்கள் இதில் பங்குபற்றினார்கள். தியான உரையை அருட்பணி. அ. பி. ஜெயசேகரம் அடிகள் நிகழ்த்தினார். எமது விசுவாசத்துக்கும் எமது செயல்களுக்குமிடையிலான முரண்பாடுகளை அவர் தனது உரையில் சுட்டிக்காட்டியதுடன் அவற்றைக் களைய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். சிலுவைப் பாதைச் சிந்தனைகளை 15 இளம் குருக்கள் வழங்கினார்கள். தற்போதைய மக்களின் பாடுகளையும் கிறிஸ்துவின் பாடுகளையும் இணைத்து தமது சிந்தனைகளை சிறப்பாகப் பகிர்ந்து கொண்டார்கள்.

தியானத்தைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாக அங்கத்தவர்கள் தெரிவு இடம்பெற்றது. யாழ் மறை மாவட்டக் குருக்கள் மன்றின் புதிய தலைவராக அருட்பணி. ஏ. யாவிஸ் அடிகளார் தெரிவு செய்யப்பட்டார். புதிய நிர்வாக உறுப்பினர்களை வரவேற்ற குரு முதல்வர் அருட்பணி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள், இதுவரை காலமும் இக்குருக்கள் மன்றினை பல்வேறு செயற்பாடுகளினூடாக வழிநடத்தி வந்து விடைபெறுகின்ற அருட்பணி. ஜி. பிலேந்திரன் தலைமையிலான நிர்வாகத்தினரைப் பாராட்டி நன்றி தெரிவித்தார். இத்தியானத்திற்கான சகல ஏற்பாடுகளையும் நிறைவாகச் செய்த சாட்டி திருத்தல பரிபாலகர் அருட்பணி ஸ்ரனிஸ்லோஸ் பிலிப் அடிகளாருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

## கலைத்தூது அழகியல் கல்லூரியின் வருடாந்த பரிசில் தினம்

திருமறைக்கலாமன்றத்தினரின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் வருடாந்த பரிசில் தினம் கடந்த மார்ச் மாதம் 10ம் திகதி கலைத்தூது கலையத்தில் நெய்தலம் இயக்குனர் அருட்பணி. அ.பி. ஜெயசேகரம் அடிகள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி திரு. கந்தையா தேவராஜா அவர்களும், சிறப்பு விருந்தினராக ஜி.ரி.இசற். களக் குழுத்தலைவர் திரு. ஞா.றொ. இராஜசிங்கம் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள். திருமதி. லக்ஷ்மிதேவி தேவராஜா பரிசில்களை வழங்கி கௌரவித்தார்.

## மன்னார் மறைமாவட்டத்திற்கு மூன்று புதிய குருக்கள்



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்சகோதராகள் மில்ரன் தேவராஜா, ரஜனிக்காந், கிறிஸ்ரி றூபன் ஆகியோர் கடந்த பெப்ரவரி மாதம் 12ம் திகதி புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் பேரருட்திரு. இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களால் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டார்கள். இவர்கள் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் தங்கள் ஆரம்ப இறையியலை கற்றவர்கள் ஆவர்.

## போரினால் பாதிக்கப்பட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேர்னாணடோ அடிகளார் உரையாற்றும்போது, கரித்தாஸ் நிறுவனம் இலங்கையின் வடக்கு-கிழக்கு மற்றும் தெற்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென இதுவரை 10ஆயிரம் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுத்திருக்கிறது. தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இது சிக்கலானதாக இருந்தாலும் அந்தப்பணி தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது.

ஆனால், இன்று திக்கம், இன்பர் சிட்டி மற்றும் சுப்பர் மடம் ஆகிய இடங்களில் வழங்கப்படுகின்ற வீடுகளைப் பெறுகின்ற மக்கள் வித்தியாசமானவர்கள். அதாவது போரினாலும், சுனாமியாலும் இவர்கள் தமது வீடுகளை இழந்திருக்கிறார்கள்.

இந்த வேலைகளை நாங்கள் முன்னெடுப்பதற்கு வெளிநாட்டிலிருக்கிற கரித்தாஸ் நிறுவனமே நிதியுதவி வழங்கியிருக்கிறது. அதிலும் கரித்தாஸ்-பிரான்ஸ் நிறுவனம் தொடர்ந்தும் எங்களுக்குப் பங்களிக்கின்றது என்று தெரிவித்தார்.

சிறப்பு விருந்தினராகக் யாழ் அரச அதிபர். கே. கணேஷ அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.

## மல்வம் - புதிய பங்குத்தளம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புதிதாக ஆயரினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அருட்பணி. சோபன் ரூபஸ் அடிகள் நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தில் கல்விப் பணியைத் தொடர நியமனம் பெற்றுள்ளார்.

புதிய பணிகளைப் பொறுப்பேற்றுள்ள அருட்தந்தையர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

## சென். பற்றிக்ஸ் கல்லூரி வடமாகாண சம்பியனாகியது

யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரி வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதிற்குட்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கட் சுற்றுப் போட்டியில் சம்பியன் பட்டத்தை வென்று அகில இலங்கை மட்டத்தில் பங்குபற்ற தெரிவாகியுள்ளது. கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இறுதிப்போட்டியில் மிகவும் பலம் வாய்ந்த அணியாகிய யாழ் மத்திய கல்லூரியை தோற்கடித்து இச்சாதனையைப் புரிந்துள்ளது.

## பிரான்சிஸ்கன் சபையின் வருடாந்த தியானம்

பிரான்சிஸ்கன் சபையினரின் வருடாந்த தவக்கால தியானம் கடந்த மார்ச் மாதம் 7ம் திகதி சபைத்தலைவர் நிக்கிலஸ் (பப்பா) அவர்கள் தலைமையில் யாழ் அருள் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

திருச்செபமாலை, அருட்தந்தை பொஸ்கோ அடிகளாரின் மறையுரை, அருட்தந்தை. ஜெபரட்ணம் அடிகளாரின் இறைதியான வழிபாடு, திருப்பலி ஆகிய ஆன்மீக நிகழ்வுகள் இத்தியானத்தில் இடம்பெற்றன. பெரியோர், இளையோர், சிறுவர் சிறுமியர் ஆகிய 200க்கும் மேற்பட்டோர் இத்தியானத்தில் கலந்து பயனடைந்தார்கள். ஆன்மீக இயக்குனர் அருட்தந்தை செல்வராஜா அடிகளார் இத்தியானத்தை நெறிப்படுத்தினார்.

**திருமதி. ச. ஜெயமலர்.**

## கவிதைத் தொகுதி வெளியீடு

கவிஞர் நெடுந்தீவு - முகிலன் அவர்களின் "∴" எனும் கவிதைத தொகுதி வருகிற 18ம் திகதி நெடுந்தீவு கலாச்சார மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

அண்மையில் இவருடைய 'மனத்திரை மேகங்கள்' என்ற கவிதை நூலும் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**விற்பனைக்குண்டு**

மோட்சபாதை
வியாகுல பிரசங்கம்
Religious Articles

புனித வளன் கத்தோலிக்க விற்பனை நிலையம்
**360, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

## 'என்ன நேர்ந்தாலும் இறைவனிற்கு நன்றி கூறுங்கள்' எமது நன்றிகள் உரித்தாகுக!

92 வயதில் 2009-03-01 இல் இறைபதம் அடைந்த எமது தாயார் திருமதி. அஞ்சலீனா முடியப்பு இராஜேந்திரம் அவர்களின் மரண செய்தி அறிந்து உடன் வீட்டிற்கு நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் அனுதாபங்களை தெரிவித்தவர்களிற்கும், அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொண்டவர்களிற்கும், திருப்பலி நிறைவேற்றியும் மறையுரை ஆற்றியும் பங்குபற்றிய குருக்கள், துறவியர்களுக்கும், வந்தனைக்குரிய எமது ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்கும், இறுதி அஞ்சலி நடாத்திய குருமுதல்வரிற்கும், எமது பங்குத்தந்தையர்களிற்கும் மற்றும் பங்குபற்றிய குருக்கள், கன்னியர்களிற்கும், திருச்சிலுவை மருத்துவ மனையில் பணியாற்றும் வைத்தியர்கள், திருச்சிலுவை கன்னியர்கள், தாதிமார்கள், சிற்றூழியர் அனைவரிற்கும், யாழ் கொமிற்சிய மரியாயின் சேனை ஆன்ம இயக்குனர் அங்கத்தவர்களிற்கும், வின்சன்டிபோல் மத்திய சபை ஆன்ம இயக்குனர் அங்கத்தவர்களிற்கும், அனைத்து பங்குகளிலிருந்தும் வந்த மரியாயின் சேனை சகோதரர்களிற்கும், எமது பங்கின் மாதா கூட்ட அங்கத்தவரிற்கும், எமது கண்ணீர் அஞ்சலி மடலை ஆக்கித்தந்த திரு. பாலதாஸ் அவர்களிற்கும் எமது துயர் அறிந்து உடன் சரீர உதவி செய்த அயலவர்களிற்கும், உறவினர்கள், அன்பிய குடும்பங்களிற்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களிற்கும் எமது அன்பு நிறைந்த நன்றிகளை கூறுகின்றோம்

**அருட்திரு. P.P பிலிப் OMI**
**சட்டதரணி T.M. அன்ரனிப்பிள்ளை**
**திருமதி. யூலியான பிறின்ஸ்**
**வெளிநாடுகளில் இருக்கும் சகோதரரும் குடும்பங்களும்.**

**10, 2ம் குறுக்கு வீதி,**
**பாசையூர் யாழ்ப்பாணம**

Advt-18/09

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2009 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org